விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 15 வியாழக்கிழமை (01.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

## 13ஐ இலங்கை மீது திணிக்க மோடிக்கு உரிமையில்லை

### பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர்

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறுவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எந்த உரிமையும் கிடையாது என்று பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு 23

## துண்டாடப்பட்ட கை யாழ்.போதனாவில் இணைப்பு

### பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் முதல் முறையாக ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் கடந்த 23 ஆம் திகதி அன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட நபருக்கு தற்போது 23

## யாழ்.புறநகர்ப் பகுதியில் ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளில் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலி 23

## நவம்பர் 17 பட்ஜெட்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற 23

# இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறல்

## ஐ.நா பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் அதிருப்தி

(ஜெனிவா)

இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறல் இடம் பெறுவதாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சிவில் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி போராடுபவர்கள் கண்காணிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார். (03ஆம் பக்கம் பார்க்க)



## ஒக்ரோபர் 9ஆம் 2 தவணை விடுமுறை

(கொழும்பு)

சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் ஒக்ரோபர் 9ஆம் திகதியுடன் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் நிறைவடைவதாக கல்வி 23

## நீதிக்காகப் போராடுவதை தடை செய்வது பாரிய மனித உரிமை மீறலாகும்

### ஐ.நா மனித உரிமைகள் சபையில் பிரான்ஸ் தமிழர்களின் பண்பாட்டு அமைப்பு

(ஜெனிவா)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த நீதிக்கான போராட்டத்தை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தடுத்தமையானது பாரிய மனித உரிமை மீறல்களாகும் என பிரான்ஸ் தமிழர்களின் பண்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 45ஆவது கூட்டத் தொடரில் குறித்த 23

## கொரோனா கட்டுப்பாட்டில் இருந்தாலும் பாதுகாப்பற்ற நிலையிலேயே நாடு இன்னும் உள்ளது

### தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் பரவல் கணிசமான அளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும், இலங்கை இன்னும் அதன் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையிலேயே உள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மீண்டும் எச்சரித்துள்ளது.

எனவே, முகக் கவ 23

## 20ஆவது திருத்தத்துக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கை 2ஆம் திகதி ஒத்திவைப்பு

(கொழும்பு)

நடப்பு அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டிருக்கும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 39 மனுக்கள் மீதான நீதிமன்ற நடவடிக்கை எதிர்வரும் 02ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள் 23

## அடுத்த கட்டம் தொடர்பில் முடிவெடுக்க மாவை தலைமையில் தமிழ்க் கட்சிகள் நேற்றும் ஒன்றுகூடி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் விவகாரத்தினையடுத்து தற்காலிகமாக ஒன்றுசேர்ந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் அடுத்த கட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் ஒன்றுகூடினர்.

இச்சந்திப்பு நேற்று மாலை யாழ்ப்பாணம் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் இடம் பெற்றது.

தியாக தீபம்திலீபனின்நினைவு நிகழ்விற்கு கோட்டாபய அரசாங்கம் பல்வேறு விதமான தடைகளை விதித்தது. 23

## மாபெரும் சீட்டிழுப்பும் வெற்றி மழைகளும்

மகாஜன சீட்டிழுப்பின் 50 ஆவது ஆண்டினை முன்னிட்டு 26.09.2020இல் நடைபெற்ற சீட்டிழுப்பின் மூலம் யாழ். மாவட்டத்தில் பல பரிசில்கள் பொழியப்பட்டுள்ளன. அதில் குறிப்பாக யாழ். நகர் முகவர் கனகலிங்கம் ஊடாக 5 இலட்சம் ஒன்றும் 1 இலட்சம் ஒன்றும் தங்கக் காசுகள் 2 வரையும் வெல்லப்பட்டுள்ளதுடன் திருநெல்வேலி முகவர் சிவகரன் ஊடாக தங்கக்காசு ஒன்றும் சாவகச்சேரி முகவர் குமாரசாமி ஊடாக லப்ரொப் கணினி ஒன்றும் மந்திகை முகவர் சுதர்சன் ஊடாக 1 இலட்சம் ரூபாய் ஒன்றும் சுன்னாகம் முகவர் சண்முகதாஸ் ஊடாக (MOUNTAIN சைக்கிள் ஒன்றும் வெல்லப்பட்டதுடன் மேலும் பல பரிசில்களும் யாழ். மாவட்டத்தில் வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மாவட்ட முகவர் NLB
S.K THILAKAWATHY
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(4333)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **உமாதேவி பஞ்சமூர்த்தி**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**
**நீலாம்பிகை**
**தியாகராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-447)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - கொக்குவில்**

## 60th Birthday Wishes



**KULANAYAGAM MOHAN**

(B.Sc Physical Science,
University Of Jaffna.
Dip. in Education, SLTS - 1)

28.02.1989 to 01.04.1993
Kekunegolla Central College,
Kekunegolla, Kurunegalla.

02.04.1993 to 16.10.2017
Jaffna Hindu College, Jaffna.

17.10.2017 to 16.04.2020
Vembadi girls' High School, Jaffna.

J/ Vembadi girls' High School
Teachers Guide

(C-451)

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு வலய உதவிப் பதிவாளர்
நாயகம் அலுவலகத்தில் முகாமைத்துவ
சேவை உத்தியோகத்தராக
கடமையாற்றும்
திருமதி **சிவநயனி சர்வேஸ்வரா**
அவர்களின் அன்புத் தாயார்

**திவ்யபவானி**
**சிவமோகன்**


அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(4332)

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகமும்**
**காணி மாவட்டப் பதிவகமும் – யாழ்ப்பாணம்.**

## மணிவிழா வாழ்த்துக்கள்



**திருமதி தமயந்தி**
**ஜெயநாதன்**
( B.Sc - Jaffna University, PGDE, SLTS I)

மன் / அல்அஸ்சார் ம.ம.வி
1985 – 1990

மட் / வந்தாறுமூலை ம.ம.வி
1990 – 1991

மட் / வின்சன் மகளிர் உயர்தர
தேசிய பாடசாலை
1991 – 2004

யாழ் / யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
2004 – 2017

யாழ் / வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை
2017 – 2020

**ஆசிரியர் கழகம்**
**யா/ வேம்படி மகளிர்**
**உயர்தர பாடசாலை**

(C-453)

## மணிவிழா வாழ்த்துக்கள்



**ஸ்ரீசாந்தினி**
**மனோகரதாஸ்**
( B.A பட்டதாரி, பேராதனை)


1989.05.15 – 1992.12.31
கண்டி மாவட்டம்
சரஸ்வதி M.M.V

1993.01.01 – 2017.12.29
யாழ். மாவட்டம்
யா / மத்திய கல்லூரி

2017.12.30 – 01.09.2020
யாழ். வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை

**ஆசிரியர் கழகம்**
**யா/ வேம்படி மகளிர்**
**உயர்தர பாடசாலை**


(C-450)



துன்னாலை வல்லிபுர ஆழ்வார் நேற்று தேரேறிவந்து அடியவர்க்கு அருள் அளிக்கும் திருக்காட்சி.
(படங்கள்:- மகாலிங்கம்)

# இலங்கையின் மனித உரிமைகள் மோசமான நிலையில்

## ஐ.நா. செயலாளர் அதிருப்தி



(ஜெனீவா)

**இலங்கையில் சென்ற ஆண்டு மனிதவுரிமை மீறல்கள் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாறான விடயங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குற்றேரஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நடைபெற்று வரும் 45 வது அமர்வில் ஐ.நா செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், இலங்கை மற்றும் ஜெனீவாவில், இலங்கை சிவில் சமூக அமைப்புகள், மனிதவுரிமை பாதுகாவலர்கள் மற்றும் பிறர் மீதான இலங்கையின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குற்றேரஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் (UNHRC) ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கை தொடர்பாக அதிருப்திகளை முன்வைத்துள்ளார்.

மேலும் இலங்கையில் இருந்து கடந்த 2018ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனிதவுரிமைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக சென்றவர்கள், தமது பயணத்துக்கு முன்னரும் அதற்கு பின்பும் விசாரிக்கப்பட்டதாக அவர் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.


அத்துடன், இவ்வாண்டு நடைபெறும் மனிதவுரிமை கூட்டத் தொடரின் கிளைக் கூட்டங்களின்போது இலங்கை மற்றும் ஜெனீவாவை தளமாகக்கொண்டு இயங்கும் பல அமைப்புகள் இவ்வாறான சவால்கள் குறித்து முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.நா. மனிதவுரிமைகள்ஆணையத்தின் உதவி செயலாளர் நாயகம் இலங்கையில் நிலவும் அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கல் முறைமை தொடர்பாக எழுத்து மூல அறிக்கையை இலங்கை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான விடயங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இலங்கை அரசாங்கம் குறித்த விடயங்களுக்கான பதிலை உடனடியாக வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அன்டோனியோ குற்றேரஸ், இலங்கையில் மனிதவுரிமை மீறல்கள் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருப்பதாக தெரிவித்திருந்த நிலையில், மீண்டும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் இந்தச் சூழல் மேசமான காலப்பகுதி என மேலும் குறிப்பிடப்டுள்ளார். (2-7)

## அரசியலமைப்பு திருத்தத்திற்கு நீதிமன்றில் தீர்வு காண்பதே சிறந்தது - சபாநாயகர்



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக 39 பேர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். எனவே இது தொடர்பான விடயத்தை நீதிமன்றத்தில் விவாதிப்பதே பொருத்தமானதாக இருக்கும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றம் தீர்ப்பை வழங்கினாலும் அதனை ஆதரிப்பவர்களும் எதிரானவர்களும் இருப்பார்கள்.

எனவே நீதிமன்றத்தில் விவாதிப்பதே சிறந்த வழியாகும்.

சபாநாயகர் என்ற ரீதியில் அதனை சபையில் சமர்ப்பிப்பது மாத்திரமே எனது கடமையாகும். அதற்கு அடுத்த கட்டம் சபையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானத்தினடிப்படையிலானதாகும்.

அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தீர்வு வழங்கிய பின்னர் அதனுடன் இவ்விடயம் நிறைவுக்கு வந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# எமது சிறார்கள் எமது தேசத்தின் அளப்பரிய சொத்துக்கள்

## வாழ்த்திய ஜனாதிபதி



(கொழும்பு)

எமது சிறுவர்கள் எமது தேசத்தின் எதிர்காலச் சொத்துக்கள். அவர்களை அறிவு ரீதியாக வளப்படுத்தி திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது முழு சமூகத்தினதும் பொறுப்பாகும். பிள்ளைகளின் உள, உடல், ஆரோக்கியத்தை வளப்படுத்துவதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை போன்றே அவர்கள் நற்பண்புள்ளவர்களாக வளர்வதற்கான சூழலை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும் என சர்வதேச சிறுவர் தினத்திற்காக ஊடகங்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு நாடு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எவ்வளவு உயர்ந்த அபிவிருத்திப் படிநிலைகளை அடைந்து கொண்டாலும் சமூகம், அன்பு, அறம் போன்ற அடிப்படை மானிடப் பண்புகளைப் பெற்றிருக்கவில்லை என்றால் அதனை ஒரு சிறந்த தேசமாக கருத முடியாது என நான் நம்புகிறேன்.

ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் எமது சிறுவர் தலைமுறையை சிறந்த ஒழுக்கப் பெறுமானங்களுடன் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் மொழி அறிவைப் பெற்றவர்களாக வளப்படுத்த வேண்டும்.

உள, உடல் பலவீனங்களிலிருந்து விடுபட்ட பிரஜைகளைக் கொண்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதுவே எனது ஒரே எதிர்பார்ப்பாகும். அத்தகையதொரு நாட்டிலேயே சிறுவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் மனநிறைவாகவும் வாழ்வதற்கான உறுதியான உத்தரவாதம் இருக்கும்.

இத்தகையதொரு தேசத்தின் நன்மைகளை அனுபவித்து மகிழும் ஒரு தலைமுறையை கட்டியெழுப்புவ தற்கு உங்களது பிள்ளைகளின் சிறு பராயத்தை நீங்கள் மிகுந்த பொறுப்புடன் நெறிப்படுத்துவீர்களென நான் எண்ணுகின்றேன். அப்போது தான் எமது தேசத்தை நாமே கட்டியெழுப்புவோம் என்ற இவ்வருட உலக சிறுவர் தின கருப்பொருளை யதார்த்தமாக்க முடியும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சாவகச்சேரி பிரதேச சபை,கொடிகாமம்.

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை மரக்கறிச் சந்தைகள்,மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள்,களஞ்சிய அறைகள், பொதுமலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 02.10.2020-15.10.2020வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 16.10.2020மு.ப 10.00மணிவரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 16.10.2020மு.ப 10.30மணி**

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBTதவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 12,084,100.00 | 120,800.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,550,600.00 | 15,500.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 906,600.00 | 9,000.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,308,000.00 | 13,000.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 105,600.00 | 1,000.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 79,000.00 | 800.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 27,400.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 26,100.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 15,100.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 19,700.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 17,600.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 16,500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 105,500.00 | 1,000.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,300.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 185,900.00 | 1,900.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 273,900.00 | 2,700.00 | 750.00 |
| 17 | கைதடிப் பொதுச்சந்தை | 22,600.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 316,600.00 | 3,200.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 72,600.00 | 700.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 44,000.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 32,700.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 11,100.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 34,200.00 | 500.00 | 750.00 |

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 02.10.2020 தொடக்கம் 15.10:2020 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை,படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (Vat, NBTநீங்கலாக)
4. 16.10.2020 ஆம் திகதியன்று மு.ப .10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கானஅறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொருமாதக் கட்டணமாக அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சிமன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளைதகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
(சி-445)

# ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவாகும்

## மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

20ஆவது திருத்தத்தின் மூலம் அரசாங்கம் ஜனநாய கத்தினை குழப்புவதற்கு முயல்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மக்களின் ஜனநாயகத்தை யும் சுதந்திரத்தையும் பாது காப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துள்ளது.

20 ஆவது திருத்தம் பெற்றோர்கள் இல்லாமல் பிறந்த குழந்தையை போல உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், நீதி யமைச்சர், பிரதமர், அமைச்சர்களுக்குக்கூட தெரியாமல் அதனை உருவாக்கியுள்ளனர்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தினையும் சர்வாதிகாரி களாக மாற்றும் நோக்கத்துடனேயே 20ஆவது திருத்தம் உருவாக் கப்பட்டுள்ளது.

மக்களின் இறைமை பாராளுமன்றத்தின் ஊடாக பிரதி நிதித்துவம் செய்யப்படுகின்றது. ஆனால் தற்போது மக்களின் இறைமை அழிக்கப்படுகின்றது.

பொதுமக்களால் தெரிவு செய் யப்பட்ட பாராளுமன்ற பிரதிநி திகளை கருத்தில் கொள்ளாமல் முடியாட்சியை ஏற்படுத்த 20 ஆவது திருத்தம் முயல்கின்றது என மத்தும தெரிவித்தார். (ஜ-4)

# முன்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் இரண்டு முன்பள்ளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது. 2020ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி நகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தில் முன்பள்ளிச் சிறார்களுக்கு என ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் நிதியில் சாவகச்சேரி நகரசபையின் உதயசூரியன் முன்பள்ளி மற்றும் மட்டுவில் கலைமகள் முன்பள்ளி ஆகிய வற்றுக்கு சத்துணவு, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி வைக்க சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது. (5-4-30)

# திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித வேளாங்கன்னி அன்னையின் திருவிழா இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை காலைத் திருப்பலியின் பின்னர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.நற் கருணை விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெறும். (5-4)

# சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

## கனடா உயர்ஸ்தானிகர் உறுதி



(கொழும்பு)

சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு கனடா பூரண ஆதரவை வழங்க தயாராக இருக்கின்றது என இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் அலிசப்ரி மற்றும் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வமான சந்திப்பொன்று நேற்று நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது இருநாடுகளுக்கிடையிலான அந்நியோன்னிய ஒத்துழைப்புகளை மேலும் அதிகரித்துக்கொள்வது தொடர்பாக இருவருக்குமிடையில் கருத்துப் பரிமாறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மனிதநேயம் கொண்ட சாதனையாளர் நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 92 ஆவது பிறந்த தினம் (01.10.2020)

கலைத்தாயின் பூரண அருள்பெற்ற தமிழ்த்தாயின் அருமைப் புதல்வன், தனது பண்பட்ட நடிப்பால் பல நுணுக்கங்களைத் திரை உலகத்துக்குக் காண்பித்தவருமாகிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 92 ஆவது பிறந்த தினம் (01.10.2020) இன்றாகும். இதையொட்டிச் சுருக்கமாக இவரது அருமை பெருமைகளை நினைவில் கொள்வோம். சிறு வயதிலிரு ந்தே அவருக் கிருந்தஅவதானிப்புத் திறமையினாலும் அபரிமித ஞாபகசக்தியினாலும் மனிதர்கள் எத்தகைய நிலைமை மற்றும் குணவியல்புகளைக் கொண்டிருந்தாலும் அவர்களது பாவனைகளை யும் உள்ளுணர்வுகளையும் துல்லியமாக அறிந்துணர்ந்து கொண்டார். அதனாலேயே தனது பலவிதப்பட்ட கதாபாத்திரங்களிலே அவைகளைப் பிரதிபலிக்க வைத்து ரசிகர்களை ஆச் சரியமும் திருப்தியும் பட வைத்தார். இவரது நடிப்புத் திறனுடன் கூடவே தயாள குணமும் பிறர் இடர் கண்டு வருந்தும் தன்மையும் மேலோங்கியே இருந்தன. இதனாலேயே இவர் நாட் டில் எந்த மாநிலத்திலேனும் புயல், வெள்ளம், தீ விபத்து போன்ற இடர்கள் ஏற்பட்டால் உடனடியாக முன் வந்து தன்னாலான உதவிகளை விளம்பரத்தை எதிர்பார்க்காமல் மனமுவந்து செய்தார். அத்துடன் இந்திய நாட்டை சீனா, பாகிஸ்தான் போன்ற அயல் நாடுகள் தாக்கிய பொழுதுகளில் அதிக அளவிலான நிதியுதவிகளை விரைந்து செய்தார். இப்படி இந்திய நாட் டிற்கும் இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இவர் செய்ததைப் போல வேறெந்த இந்திய நடிகரும் செய்யவில்லை என்று துணிந்து சொல்லலாம். அத்துடன் கல்விச்சாலைகள், பொது நிறுவனங்கள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் அனைத்திற்கும் நிதியுதவிகளைச் செய்தார். பல பெரியவர்களுக்குத் தனது சொந்தச் செலவிலேயே சிலைகள் அமைத்து மகிழ்ந்தார்.



இனி இவரது திரைச் சாதனைகளைப் பார்ப்போம்

சிவாஜிகணேசன் நடித்த மொத்தப் படங்கள் 304. அவற்றில் ஏராளமான படங்கள் சாதனை படைத்தவை. சிவாஜி நடித்த முதல்படம் "பராசக்தி" 1952 தீபாவளிக்கு (17.10.1952) வெளிவந்தது. கடைசிப் படமான "பூப்பறிக்க வருகிறோம்" 17.09.1999 இல் வெளிவந்தது.

**304 படங்கள்**

1952 முதல் 1999 வரை தமிழ், தெலுங்கு, இந்தி முதலான மொழிகளில் இவர் நடித்த படங்கள் 287. இவை தவிர 7 தமிழ்ப் படங்களிலும் 7 தெலுங்குப் படங்களிலும் 2 கன்னடப் படங்களிலும் ஒரு இந்திப் படத்திலும் கௌரவ வேடத்தில் நடித்தார். எனவே அவர் நடித்த படங்களின் எண்ணிக்கை 304. இவற்றில் 23 படங்கள் வெள்ளி விழாப் படங்கள், 88 படங்கள் 100 நாட்களுக்கு மேல் ஓடியவை.

**சாதனைகள்**

வருடத்திற்குச் சராசரியாக 7 படங்களை இவர் தந்திருந்தாலும் பல படங்கள் வெற்றிகளையும் வசூலில் சாதனைகளையும் படைத்தன.

**அவை பற்றிய விபரங்களாவன:**

பராசக்தி (17.10.1952) தமிழ் நாட்டில் 5 தியேட்டர்களில் வெள்ளி விழாவையும் 23 தியேட்டர்களில் நூறுநாள் விழாவையும் கொண்டாடியது. திருச்சி "வெலிங்டன்" தியேட்டரில் 245 நாட்களும் இலங்கையில் கொழும்பு நகரில் உள்ள "மைலன்" தியேட்டரில் 294 நாட்களும் ஓடியது. வெளிநாட்டில் வெள்ளிவிழாக் கொண்டாடிய முதல் தமிழ்ப் படமாகிய இது 1962 இல் மீண்டும் திரையிடப்பட்டபோது (தமிழ் நாடெங்கும்) பல ஊர்களில் 100 நாட்கள் ஓடிச் சாதனை படைத்தது.

**சம்பூர்ண இராமாயணம் (14.04.1958)**

மதுரை "ஸ்ரீதேவி"யில் 24 வாரங்கள். இதற்கிடையே "உத்தமபுத்திரன்" சென்னையில் 21 வாரங்களும் "சுபாஷ் மீனா" 23 வாரங்களும் ஓடின.

**வீரபாண்டிய கட்டபொம்மன் (16.05.1959)**

மொத்தம் 27 திரையரங்குகளில் நூறு நாள் கொண்டாடியது. மதுரை "நியூ சினிமா"வில் 181 நாட்கள் ஓடி வெள்ளிவிழாக் கண்டது. சென்னை யில் "சித்ரா", "கிரவுண்", "சயானி" ஆகிய திரையரங்குகளிலும் மற்றும் சில வெளியூர்களிலும் 168 நாட்கள் ஓடி வெள்ளிவிழாவை நெருங்கிக் கொண்டிருந்தபோது தீபாவளிக்கு "பாகப்பிரிவினை" வெளியிடப்பட்டதால் 5 திரையரங்குகளில் வெள்ளிவிழாவை நூலிழையில் நழுவியது.

**பாகப்பிரிவினை (31.10.1959)**

மதுரை "சிந்தாமணி"யில் 216 நாட்கள் ஓடியது. சென்னை, கோவை, சேலம், திருநெல்வேலி, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஊர்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

**பாவமன்னிப்பு (16.03.1961)**

சென்னை "சாந்தி"யில் 177 நாட்கள் ஓடி வெள்ளிவிழாக் கொண்டாடியது. தமிழ்நாட்டில் 18 திரையரங்குகளில் 154 நாட்கள் வரை ஓடியது. இராமநாதபுரத்தில் "சிவாஜி டூரிங் டாக்கீ"சில் 100 நாட்கள் ஓடியது. இந்தியாவிலேயே டூரிங் தியேட்டரில் 100 நாட்கள் ஓடிய படம் இதுதான் என்று கருதப்படுகிறது.

**பாசமலர் (27.05.1961)**

தமிழ்நாட்டில் 18 திரையரங்குகளில் நூறு நாட்களுக்கு மேல் ஓடிய படம். 6 தியேட்டர்களில் 23 வாரங்களைக் கடந்து ஓடியது. அவற்றில் "சித்ரா"வில் வெள்ளிவிழாக் கொண்டாடியது. தீபாவளி காரணமாக 164 நாட்களில் (வெள்ளிவிழாவுக்கு 11 நாட்கள் இருக்கும்போது) ஐந்து தியேட்டர்களில் படம் எடுக்கப்பட்டது.

**திருவிளையாடல் (31.07.1965)**

சென்னையில் மூன்று தியேட்டர்களிலும் மதுரையிலும் வெள்ளி விழாக் கொண்டாடியது. மற்றும் 9 ஊர்களில் 100 நாள் முதல் 150 நாள் வரை ஓடியது.

**"தர்த்தி" (இந்தி "சிவந்த மண்") -06.02.1970**

சிவாஜி கௌரவ வேடத்தில் நடித்த இந்தப்படம் மும்பையில் 3 தியேட்டர்களில் 200 நாட்களைக் கடந்து ஓடியது. மும்பை "மினர்வர்" தியேட்டரில் 259 நாட்களும் டெல்லியில் 4 தியேட்டர்களில் 200 நாட்களைக் கடந்தும் கொல்கத்தாவில் 266 நாட்களும் ஓடியது.

**பட்டிக்காடா பட்டணமா (06.05.1972)**

14 தியேட்டர்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடிய இப்படம் மதுரை "சென்ரலில்" 182 நாட்கள் ஓடியது.

**வசந்தமாளிகை (29.09.1972)**

மொத்தம் 17 அரங்குகளில் நூறு நாட்களைக் கடந்து ஓடிய படம். சென்னை "சாந்தி"யில் 176 நாட்களும் மற்றும் 2 தியேட்டர்களில் 140 நாட்களும் மதுரை நியூ சினிமாவில் 200 நாட்களும் ஓடிச் சாதனை படைத்தது. கொழும்பு நகரில் "கேபிடல்" தியேட்டரில் 287 நாட்களும் "பிளாசாவில்" 78 நாட்களும் ஓடியது. யாழ்ப்பாண நகரில் "வெலிங்டன்" தியேட்டரில் 30 வாரங்களும் "லிடோ" தியேட்டரில் 4 வாரங்களும் ஓடியது.

**தங்கப்பதக்கம் (01.06.1974)**

சென்னையில் "சாந்தி", "கிரவுன்", "புவனேஸ்வரி" ஆகிய தியேட்டர்களிலும் திருச்சியில் "பிரபாத்" தியேட்டரிலும் வெள்ளி விழாக்கொண்டாடியது. 17 அரங்குகளில் 100 நாட்கள் கொண்டாடியது.

**உத்தமன் (1976)**

மதுரை "நியூசினிமா" வில் 100 நாட்கள் ஓடியது. இலங்கையில் 12.05.1978 அன்று வெளிவந்து கொழும்பு "சென்ட்ரல்" திரையரங்கில் 203 நாட்களும், யாழ்ப்பாணம் "ராணி" திரையரங்கில் 180 நாட்களும் மட்டக்களப்பு "விஜயா" தியேட்டரில் 102 நாட்களும் ஓடிச் சாதனை புரிந்தது.

**பைலட் பிரேம்நாத் (30.10.1978)**

இந்தியா - இலங்கைக் கூட்டுத் தயாரிப்பில் வெளியான படம் கொழும்பு "கேபிடல்"தியேட்டரில் 189 நாட்களும் யாழ்ப்பாணம் "வின்சர்" தியேட்டரில் 222 நாட்களும், வெள்ளவத்தை "சவோய்" தியேட்டரில் 107 நாட்களும் ஓடியது. "கிங்ஸ்லி" திரையில் 67 நாட்களும் ஓடியது.

**திரிசூலம் (27.01.1979)**

சிவாஜியின் மாபெரும் வெற்றிப்படம் 20 தியேட்டர்களில் நூறு நாட்களைத் தாண்டி ஓடியது. 10 அரங்குகளில் வெள்ளி விழாக் கண்டது. 15 தியேட்டர்களில் 20 இற்கு மேற்பட்ட வாரம். சென்னையில் "மிட்லண்ட்" தியேட்டரில் ராஜ்கபூரின் "பாபி" (இந்தி) படம் 283 நாட்கள் ஓடி 14 லட்சத்து 51 ஆயிரத்து 782 ரூபாயை வசூலித்தது. ஒரு தியேட்டரில் அதிக பணம் வசூலித்த படம் என்று "பாபி" ஏற்படுத்தியிருந்த ரெக்கார்டை திரிசூலம் முறியடித்தது. "சாந்தி" தியேட்டரில் 175 நாட்களில் "திரிசூலம்" வசூலித்த தொகை 16 இலட்சத்து 13 ஆயிரத்து 648 ரூபாவாகும். மதுரை "சிந்தாமணியில்" 400 காட்சிகள் தொடர்ந்து "ஹவுஸ்புல்" காட்சிகளாக ஓடியது. நடிகர் திலகத்திற்கு வாழ்க்கையில் கிடைத்த பட்டங்கள், கௌரவங்கள்.ஏராளம் அதுபோல் இவரது பல படங்களுக்குக் கிடைத்த பரிசுகளும் பாராட்டுக்களும் ஏராளம். இடம் போதாமையினால் அவற்றை இங்கே குறிப்பிட முடியவில்லை. கடின உழைப்பாளியாகிய இவர் தனது தொழிலுக்குக் கொடுத்த மரியாதை, நேரந் தவறாமை என்பன பலராலும் போற்றப்படுகின்றன. அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்யாமல் மனிதப் பண்பாட்டுடன் வாழ்வாங்கு வாழ்ந்து தன் நாட்டிற்கும் தன் மொழிக்கும் பெருமைகளைச் சேர்த்தும் சான்றோர்கள், தலைவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பேருதவிகள் புரிந்தும் அறக்கொடைகள் வழங்கியும் பெருவாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார். இவரது பிறந்த தினமாகிய இன்று நாமும் இவர் செய்த நற்காரியங்கள் பலவற்றையும் நினைவு கூர்ந்து அவர் தொண்டுகளை வாழ்த்துவோம். நன்றி!

**யாழ்.மாவட்ட சிவாஜி ரசிகர்கள் குழு**

**திரைச்சாதனைகளுக்கு ஆதாரம்: தினத்தந்தி (09.09.2019)**

# அருட்தந்தை பிலேந்திரன் வாழ்நாள் பேராசிரியராக நியமனம்



(யாழ்ப்பாணம்)

அருட்தந்தை கலாநிதி ஜி.பிலேந்திரனிற்கு யாழ்.பல்கலைக் கழகத்தினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழ்நாள் பேராசிரியராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மண்டைதீவைச் சேர்ந்த இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ ,இஸ்லாமிய துறையில் கடந்த 25 ஆண்டுகளாக விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (5)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

146 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அளவெட்டி அஞ்சல் சமூகம், பொது அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களைப் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-110)




சூரிய நிறுவகத்தினால் நடத்தப்பட்ட இலவச சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த யாழ.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 230 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சுதுமலை குபேர மஹால் மண்டபத்தில் தே.பிரேமராசா தல்லைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சூரிய நிறுவ கத்தின் இயக்குநர் கமால் சிறிவர்தன கலந்து கொண்டார்.

(படம்:-கஜிதன்)

# வீதிப் புனரமைப்பினால் வெள்ளம் தேங்கும் அபாயம்

## நிவர்த்தி செய்ய மக்கள் கோரிக்கை



(அளவெட்டி)

பன்னாலை வீதியையும் காங்கேசன்துறை வீதியையும் இணைக்கும் குஞ்சர் வீதி (கணேஸ்வரம் வீதி) வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகிறது. குறித்த வீதியில் இடையிடையே வீதி உயர்த்தப்படும் உயரத்தை விட தாழ்வாக பதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வீதி தாழ்த்தப்பட்ட இடங்களில் கொங்கிறீட் போடப்பட உள்ளது.

அவ்வாறு வீதியை பதித்து கொங்கிறீட் போடுவதால் மழை காலங்களில் பொதுமக்களின் குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் மழைநீர் செல்லக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக மக்களால் பிரதேச செயலகத்திற்கு அறிவித்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் பொதுமக்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை பிரதேச செயலர் ஏற்பாடு செய்திருந்தார். குறித்த கலந்துரையாடலில் மக்கள்,வீதியை ஒரே மட்டத்தில் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். இருப்பினும் மக்கள் கருத்துக்களை கருத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக வீதி புனரமைப்புகள் நடைபெறுகின்றன.

கிராம மக்கள் வீதியை ஒரே மட்டத்தில் அமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்தும் தொடர்ந்தும் வீதிப் புனரமைப்பு நடைபெறுகின்றன. எனவே வீதியை ஒரே மட்டத்தில் அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அண்மையில் பெய்த சிறு மழைக்கே அப்பகுதியில் பாரிய வெள்ளம் ஏற்பட்டிருப்பதையும் மக்கள் சுட்டிக்காட்டினர். (5-4-110)



வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் 2 ஆம் குறுக்கு வீதி மற்றும் முத்துக்கிஸ்ணர் 2 ஆம் குறுக்கு வீதி ஆகியன புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக பிரதேச சபை உறுப்பினர் பா. சுரேஸ்குமாரினால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன. (படம்:-ரவிசாந்)




இயற்கை உணவு மூலிகை வைத்தியர் நாகலிங்கம் குலசிங்கம் எழுதிய "சித்தர்கள் வழி யோகா மற்றும் உணவு மருத்துவம்" எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர் வைத்திய கலாநிதி எஸ்.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவர், செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொண்டு மேற்படி நூலை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைத்தார். (படம்-ரவிசாந்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (ICTT- NVQ Level 4) சான்றிதழைப் பெறுவதற்கான இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமைகளாக,

க.பொ.த(சா/த) இல் கணிதம் – C, ஆங்கிலம் – C உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி.அல்லது கணிதம்– S , ஆங்கிலம் - S உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் , க.பொ.த (உ/த) இல் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் , தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல. 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 23.10.2020 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கான (ICTT) விண்ணப்பம் என குறிப்பிடப்பட வேண்டும் எனவும் மாவட்ட முகாமையாளர் ஞா.தே.இரத்தினகுமார் அறிவித்துள்ளார். (5)



யாழ்ப்பாணம்-நல்லூர் சீரடி சாயி கோவில் தேர்த் திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தீர்த்தோற்சவ சிறப்பிதழ் - 01.10.2020

## அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற அச்சுதனே அவதார புருஷனே வணங்குகிறோம் உன் அடியை



சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பாகவும் விளங்குவது சமுத்திரத் தீர்த்தத்திருவிழா ஆகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத்திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெரும் திரளான மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார்.

பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு'சங்கு, சக்கரம், மாயவா, கேசவா, வைகுந்தா நாராயணா, கண்ணா கோவிந்த மல்லையைக் கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்சவதாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச் செல்வார்கள். கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும் போது மாயவனின் ச்முத்திரத்தீர்த்தம் நடைபெறும்.

"ஆழியெழ சங்கும் வில்லுமெழ திசை
வாழியெழ தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடியாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே"

-ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழி

சங்கு, சக்கரம், வில்லு, தண்டாயுதம், வாள் ஆகிய ஐந்தும் எம்பெருமான் ஸ்ரீ மகா விஷ்ணுவின் பிரதான ஆயுதங்களாகும். இவற்றைப் பஞ்சாயுதம் என்றும் கொள்வர். அண்ட சராசரங்களையும் காத்து அருள்புரியும் எம்பெருமான் அவற்றை இந்த ஐந்து ஆயுதங்களின் மூலமே செய்வதாக புராணங்கள் கூறும். பஞ்சா யுதங்களுள் முதன்மையானது "ஆழி அல்லது சக்கரம்" ஆகும். இதனை சுதர்சனம் என்றும் அழைப்பர்.

இது பகவானது வலது கையில் இருப்பதால் மகாவீரம் வாய்ந்ததாகும். எதிரிகளை தயவு தாட்சண்யமின்றி அழிப்பதால் "ருக்ரம்" வாய்ந்ததாகும். இவர் பகவானுடைய கட்டளைகளைக்காக காத்திருந்து நித்யசேவை புரிவதால் "சக்கரத்தாழ்வார்" என்றும் போற்றப்படுகின்றார். இவரை வணங்குவதால் எதிரிகள் தோற்கடிக்கப்ப டுவதுடன் பேய், பிசாசு, பில்லி, சூனியம், நோய் நொடிகளும் விலகி விடுகின்றன.

பகவானது ருத்ர அவதாரமானது நரசிம்மத்தின் அம்சமே சுதர்சனம் என்றும் கொள்வர். பகவான் துஷ்டர்களை அழிப்பதற்கும் பக்தர்களைக் காப்பதற்கம் யுகம் தோறும் அவதரிப்பதுடன் பக்தர்களுக்கு நித்ய அனுக்கிரகம் செய்வதற்காக இப்பூவுலகின் பல்வேறு பாகங்களிலும் அச்சாவதார மூர்த்தியாய் தோன்றி அருள் பாலிக்கின்றார். அவ்வாறு தோன்றிய திவ்ய சேத்திரம் தான் ஈழத்தின் ஸ்ரீ வல்லிபுரம் ஆகும்.

வல்லிபுரத்தில் கோயில் கொண்டபடியினால் வல்லிபுரநாதன் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. பகவானை முழுமையான திவ்ய சொரூபத்தில் வணங்குவதற்கு பல கடுமையான சாஸ்திர சம்பிரதாயங்கள் இருப்பதால் மிக இலகுவாக எளிமையான பக்தி சேவையினால் இறைவனைத் துதிப்பதற்கு அவர்களது ஆயுத வழிபாடு துணை புரிகின்றது.

எமது வல்லிபுரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் சகல மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மாயவரின் ஆழித்தீர்த்தம் இன்று நடைபெறுவது இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் பங்குகொண்டு வல்லிபுர நாதனின் திருவருள் பெறுவோமாக.

**சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன், சமாதான நீதவான்**
**கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூக சேவையாளர் , கற்கோவளம்.**

## பிரதம குருமார்களின் நல்லருளாசிகள்



சார்வரிவருட ஆவணி
31ஆம் நாள்
கொடியேற்றம்
(16.09.2020)
இரதோற்சவம்
(30.09.2020)



சமுத்திர தீர்த்தம் (01.10.2020)
கொடியிறக்கம் (02.10.2020)

மெய்யன்பர்களே! அவனருளாலே அவன் தாள் பணிந்து. எம்பெருமான் ஸ்ரீ சக்கரரூப மாயவனது வரு டாந்த மகோற்சவத்தின் வரலாறு போற்றும் சமுத்திர தீர்த்தத் திருவிழா இன்று (01.10.2020) புரட்டாதி 15 ஆம் நாள் வியாழக்கிழமை மாயவனின் திருவருளோடு நடைபெறு கிறது. இன்றைய சிறப்புக்கள் பலவும் வாய்ந்த பூரணை நன்னாளில், கடல் நீராடி சகல பாவங்களையும் போக்கி தூய மனிதர்களாக, புனிதர்களாக வாழ எம்பெருமானின் சக்கர மாயவன் திருவடி வணங்கி மாயவனின் நல்லரு ளையும் ஆசிகளையும் எமது நல்லாசிகளையும் மிக்க மகிழ் வோடு கூறிக்கொள்கின்றோம் என்றும் மாயவன் தாள் பணிந்து.

**மாயவனின் நிழலில் பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக்குரு (ஜே.பி.)**
**பிரம்மஸ்ரீ.சுதர்சன கணபதீஸ்வரக்குரு (பிரதான குருமார்கள்)**

## உயர்வர மளிப்பாய் தேவே

அலைமேவும் கடலில் ஆவலொடு நீராடும்
ஆயர்குலக் கண்ணா ஆழ்கடல் வண்ணா
தலையாய துன்ப துயரங்கள் நீங்க
தாவிலாவுன் அடிதனைத் தொழுது வணங்கி
குலையாத அழகோடு பொலிவான பந்தற்கீழ்
கூடிப் பணிவோர் குறைகளையும் கோபாலா
கலைமேவும் கற்கோ வளநகர் மக்கள்
காரியம் யாவினும் கைகொடுக்கும் கண்ணா
உளையாத வாழ்வுபெற் றுயரும் வண்ணா
ஊக்கமது தந்து உயர்வர மளிப்பாய் தேவே.

**கலாபூஷணம் மு.தனிகாசலம், கற்கோவளம்.**

## மகா சபைச் செயலாளரின் வாழ்த்துரை



புரட்டாதிப் பூரணையாம் இந்நாளில் ஆண்டுதோறும்
வங்கக் கடலின் கற்கோவளப் பதிக் கரையில்
பக்தியுடன் பரவசிக்கும் அடியாருடன் இணைந்து
நீராடி அருள்புரியும் நெடுமாலே பதம் பணிந்தோம்
துன்பமும் தோயும் தொடர்ந்தும் தமிழனுக்கா

இன்பமும் நிம்மதியும் எம்மினத்தை முத்தமிட
இருளெல்லாம் ஒளியாக இன்னல்கள் கரியாக
வல்லமை தாராய் வாழ வைப்பாய் மாயவனே
சுதர்சன சக்கரமே சுழன்றிடுவாய் எமைக்காக்க
வந்தித்தோம் வைகுந்தா காத்திடுவாய் காருண்யா!

**தி.ச.இராகவானந்தன்,சமுத்திர தீர்த்தோற்சவ உபயகாரரும் மகா சபைச் செயலாளரும்**

சிறீரங்கம்
ரெக்ஸ் ரைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை-1 வதிரி வீதி, உடுப்பிட்டி.

விக்னேஸ்வரா
திருமண மண்டபம்
Room, Hall A/C Facility
Conferene Hall With 200 Seating Capacity
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே: 021 226 1567



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சரவணா மகாலட்சுமி தங்கமாடம்
இல.93.பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே: 021 321 4577



தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
தரன் நகை மாளிகை
ம.ம.வி.வீதி,நெல்லியடி
தொ.பே: 021 321 9254
கிளை
தரன் நகை மாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.



தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
வைஷ்ணவி
நகைப்பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 4519



நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சுசீலா
ஆபரண மாளிகை
இல.258, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.: 021 226 3064
நியூ சுசீலா ஆபரண மாளிகை
இல.228, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 021 226 4154



நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சிறீ சுசீலா
நகை மாளிகை
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே:- 021 226 1003

## சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மழலைகள் பூங்காவின் சிறுவர் தின நிகழ்வு இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் தலைவர் சு.சேதுநாதன் (மகாஜனன்) தலைமையில் நடைபெறும்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கி, தெல்லிப்பழைக் கிளை முகாமையாளர் எஸ்.சரத்சந்தர் (மகாஜனன்), யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் என்.சிவகரன் (மகாஜனன்), யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.புராதனி (மகாஜனன்) ஆகியோர் கலந்து கொள்வர்.

பிரதம விருந்தினர்களாக முன்பள்ளி சிறார்கள் கலந்து கொள்வர். (5)

## சனீச்சுர வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் புரட்டாதி சனிக்கிழமை சனீச்சுரவழிபாடுகள் நாளை மறுதினம் 3 ஆம் திகதியும் எதிர்வரும் 10 ஆம் திகதியும் காலை 8.30 மணியளவில் நடைபெறும்.

இதில் சனீச்சுரப் பெருமானுக்கும் யேட்டாதேவிக்கும் விசேட திருமஞ்சனமும் வழிபாடுகளும் இடம்பெற்று 10.30 மணியளவில் சனீச்சுரப்பெருமான் திருவீதியுலா எழுந்தருள்வார்.(7)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

சான்றுப் பொருட்களாவன 2 மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ, தங்கச் சங்கிலி என்பனவாகும். (5)

## காந்தி ஜெயந்தி நாளை

(கிளிநொச்சி)

மகாத்மா காந்தியடிகளின் 151 ஆவது ஜெயந்தி தினம் மற்றும் சர்வதேச அகிம்சை தின நிகழ்வு நாளை 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தியும், கௌரவ விருந்தினராக கிளி/ பன்னங்கண்டி அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி.ஜெயராணி லோகநாகேஸ்வரனும் கலந்து கொள்வர். (5)

## முதியோர் கௌரவிப்பு

(குப்பிழான்)

முதியோரைக் கௌரவித்தலும் புற்றுநோயாளர்களிற்கு உதவி வழங்கலுக்காக நிலையான வைப்புக்குரிய நிதி திரட்டலுக்கான பெருவிழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணி முதல் குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயத் தலைவரும் ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தருமான சோ.பரமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிறப்பு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ம.அரவிந்தன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஓய்வுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கந்தப்பு பாலசுப்பிரமணியம், எழுத்தாளர் ஐயாத்துரை சண்முகலிங்கம், தேசிய கல்வி நிறுவக ஓய்வுநிலைப் பணிப்பாளர் கலாநிதி உ.நவரத்தினம், வடமாகாண ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன், கமநலத் திணைக்களக் கணக்காளர் கு.சுரேஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (5-4-18)

## 100% மானிய உரம் வழங்கல்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான நூறு வீதம் மானிய உரம் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏக்கர் விகித அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (5-4-316)

## கடும் காற்றால் பயன்தரு மரங்கள் சேதம்



(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நேற்று வீசிய கடும் காற்றினால் மக்கள் குடியிருப்புக்கள் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக வடமராட்சி கிழக்கின் பல கிராமங்களில் பனை தென்னை மற்றும் வாழை மரங்கள் முறிந்தும் வேரோடு சாய்ந்தும் உள்ளன.

இதனைவிட மாமுனை தெற்கு கிராமத்தில் ஒரு வீட்டின் இருபக்கமதில்கள்முற்றாக உடைந்து விழுந்துள்ளன. இதனை விட வீட்டின் கூரையும் சேதமடைந்துள்ளது. அங்கும் பனை, தென்னை, வாழை எனப் பல பயன்தரு மரங்களும் அழிந்துள்ளன. (5-4-64)

## தமிழ் நாடக விழா - 2020

(கொழும்பு)

டவர் மண்டப அரங்க மன்றம் இலங்கையின் நாடகத்துறைக்கான மத்திய நிலையமாக விளங்குகின்றது. நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும் நாடகத் துறையை மேம்படுத்தும் நோக்குடனும் இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

இவ்வருடம் ஏற்பட்ட கொரோனாப் பரவல் காரணமாக நாடகத்துறை பாதிக்கப்பட்டதுடன் நாடகக் கலைஞர்களும் பாதிக்கப்பட்டனர்.

இந்தப் பாதிப்பிலிருந்து மீண்டெழ வேண்டும் என்ற நோக்கில் டவர் மண்டப அரங்க மன்றம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலுக்கு ஏற்ப "ப்ரேக்ஷா" என்ற நாடக விழாவை மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் டக்ளஸ் சிறிவர்த்தன தலைமையில் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் இந்நிறுவனத்தின் தமிழ்த்துறை பணிப்பாளர் கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி முதல் மருதானை எல்.பின்ஸ்டன் அரங்கில் தமிழ் நாடக விழா ஆரம்பமாகவுள்ளது.

இதில் 19 குறுநாடகங்கள்,5 நெடுநாடகங்கள் மேடை ஏறவுள்ளன.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இலங்கையின் நாலா புறங்களிலிருந்தும் 300 இற்கு மேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்கு கொள்வர்.

அதனைத் தொடர்ந்து இந்த நாடக விழா யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடைபெறவுள்ளது.

நாடகவிழாவில், 2020 ஒக்டோபர் 3 ஆம் திகதி கே.சீலனின் "சிமாஹாவின் கனிந்த இரவு", ரி.அயூரனின் "வண்டிப் பயணம்", கே.சீலனின் "அடையாளம்" என்ற நாடகங்களும் ஒக்டோபர் 4 ஆம் திகதி ரி.தர்மலிங்கத்தின் "காரல்", ஏ.இளங்கோவின் "நிதர்சனம்", கே.செல்வராஜனின் "சந்தேகக்கனவுகள்", ரி.தர்மலிங்கத்தின் "சடக்கு வேலி"யும் ஒக்டோபர் 5 ஆம் திகதி ரி.தர்மலிங்கத்தின் "ஆடவன்", ஆர்.லோகநாதனின் "இப்படி ஒரு நாள்", ரி.தர்மலிங்கத்தின் "வரைவாளி", ரி.தர்மலிங்கத்தின் "குருவிச்சை"யும் ஒக்டோபர் 6 ஆம் திகதி ரி.டக்ளஸின் "மனதில் உறுதி வேண்டும்", மொழிவாணனின் "அரச பணிக்காக மட்டும்", பி.சிவபிரதீபனின் "வந்தவன்", ஏ.இளங்கோவின் "கோவிட்-19"ம் ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆர்.என்.ஆர்.அரவிந்தின் "கட்டை விரல்", ஆர்.என்.ஆர்.அரவிந்தின் "நினைவெல்லாம்", ஆர் ஸ்ரீகாந்தின் "அங்கீகாரம்", ஆர்.என்.ஆர். அரவிந்தின் "போலிமுகம்" ஆகிய குறு நாடகங்கள் மேடை ஏறுகின்றன.

2020 ஒக்டோபர் 8 ஆம் திகதி ஆர்.கிங்ஸிலியின் "தற்கொலை", ஒக்டோபர் 9 ஆம் திகதி தர்ஷன பிஹேரவின் "விளம்பரம் ஒட்டக்கூடாது",ஒக்டோபர் 10 ஆம் திகதி சிவாபிரதீபனின் "வினை விதைத்தவன்", ஒக்டோபர் 12 ஆம் திகதி ராதாமேதாவின் வ(ர)ம்பு, ஒக்டோபர் 13 ஆம் திகதி சுபாஷினியின் "அவஸ்தை" ஆகிய நெடும் நாடகங்களும் மேடையேறவுள்ளன. (5-4)

## துப்புரவு செய்யப்பட்டது கனகாம்பிகைக் குளம்



(அக்கராயன்)

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் துப்புரவுப்பணிகள் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் கனகாம்பிகைக்குளம் வான்பாயும் போது ஆறு துப்புரவு செய்யப்படாததன் காரணமாக இரத்தினபுரம், ஆனந்தபுரம் மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் பரவுகின்ற நிலைமை காணப்பட்டது.

நீண்டகாலமாக இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் விடுத்த கோரிக்கைக்கமைவாக ஒரு மில்லியன் ரூபாய் செலவில் குறித்த துப்புரவுப் பணியினை நீர்ப்பாசனத் திணைக்களம் நிறைவு செய்துள்ளது.

கனகாம்பிகைக்குளத்தின் நீர் ஆறு வழியாக ஓடி கிளிநொச்சி குளம் நிரம்பி வழிந்து உமையாள்புரம் வழியாக கடலினைச் சென்றடையும்.

கனகாம்பிகைக்குளம் ஆறு துப்புரவு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக கிளிநொச்சி நகரத்தின் வெள்ளம் தேங்குவது தற்போது தடுக்கப்பட்டுள்ளது. (5-4-350)

## இராசிபலன்

01.10.2020
புரட்டாதி 15, வியாழக்கிழமை
பூரணை பின்னிரவு 2.50 மணிவரை
உத்திட்டாதி முழுவதும்
சுபநேரம் 7.32 - 9.02 மணிவரை
இராகுகாலம் 1.32 - 3.02 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூரம்
பூரணை விரதம்
உலக சிறுவர் தினம்

வளவன்


மேஷம்
தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மிதுனம்
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.


கடகம்
கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.


சிம்மம்
வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி
பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்
தலைமைப்பதவிகள் உங்களை நாடி வரலாம், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்
பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், தூரதேசத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


தனுசு
சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.


மகரம்
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்
நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


மீனம்
பக்குவமாக நடந்து பாராட்டு பெற வேண்டிய நாள், புதியவர்கள் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

அழுகை இரசிக்க கண்கள் ஆசைப்படுவது இயற்கையே.

# தபால் திணைக்களத்திற்கு 6 பில்லியன் ரூபாய் நட்டம்

## ஜனாதிபதி அவதானம்

**(கொழும்பு) இலங்கை தபால் சேவை தனது சேவையின் நோக்கத்தை இனங்கண்டு கொண்டால் தேசிய பொருளாதாரத்தில் பிரதான பங்குதாரராக மாற முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.**

தபால் சேவையில் காணப்படும் பாரியளவிலான வளங்களை உரிய வகையில்முகாமை செய்வதன் ஊடாக குறித்த இலக்கை இலகுவாக அடைய முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தபால் சேவை மற்றும் வெகுஜன ஊடக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வருடம் தோறும் தபால் திணைக்களத்திற்கு 6 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும் குறித்த கலந்துரையாடலில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, ஊடகவியலாளர்களின் தொழில்முறை திறன் வளர்ச்சிக்காக பயிற்சி நிறுவனத்தை நிறுவுவதற்கும் பத்திரிகைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளவும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது. நாட்டு நாடகத் தொடர் ஒளிபரப்பின் போது அறவிடப்படும் வரியினை மீண்டும் செயற்படுத்த இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ஜ-4)

# சஜித்தை நோக்கி கல்வீச்சு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

## இருவர் கைது

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்ட கூட்டமொன்றில் கல்வீச்சுத் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.


நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இரத்மலானையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சஜித் பிரேமதாஸ உரையாற்றிக்கொண்டிருக்கும் போது அவரை நோக்கி இனந்தெரியாதவர்கள் கற்களை வீசியுள்ளனர்.

சஜித் பிரேமதாஸவுக்கு உடனடியாக மேலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.



இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

# கட்டட அனுமதிக்கான நடைமுறையில் மாற்றம்



(கொழும்பு)

நாட்டில் ஆபத்தான கட்டடங்களை அடையாளங்காண்பதற்கும் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டடங்களுக்கு அனுமதியை வழங்குவதற்கும் புதிய திட்டம்ஒன்றைக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, கட்டடங்கள் தொடர்பில் ஆராய்கின்ற உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுக்கு, புவிச் சரிதவியல் மற்றும் அளவை சுரங்கப் பணியகத்தினால் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், இடிந்து வீழ்ந்த பெருமளவான கட்டடங்கள், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளின் அனுமதியுடனேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி பூவெலிக்கடைப் பகுதியில், அண்மையில் ஐந்து மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததையடுத்தே இவ்வாறு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி பூவெலிக்கடைப் பகுதியில் இடிந்து வீழ்ந்த கட்டடம், உரிய முறையில் நிர்மாணிக்கப்படவில்லை என ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சிறகு விரித்துப் பறக்க விடுவோமே!



சர்வதேச சிறுவர் தினம் இன்று

குழந்தைகளுக்கிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக சிறுவர் தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் 1954 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையில் இன்றைய தினம் இது கொண்டாடப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு தினங்களில் இந்த நாள் கொண்டாப்படுகின்றது.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் இந்த நாளிலே நினைவுகூரப்படும். ஏனெனில் சிறுவர் துஷ்பிரயோகம் உலகமெங்கிலும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இதனை இல்லாமல்ஒழிக்க பல நாடுகள் பல சட்டங்களை கொண்டு வந்தாலும் இது ஓய்ந்தபாடில்லை. பல காரியங்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுவதால் பிற்காலத்தில் அவர்கள் ஒரு வன்முறையாளர்களாக வருவதற்கான சாத்தியமே உண்டு.

சிறுவர்களின் அடிப்படை உரிமையான கல்வியை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பல சிறார்கள் இன்றைய நாளை சந்தோசமாக கொண்டாடினாலும் நாம் அறியாத பல சிறு உள்ளங்கள் வேதனையிலும் கஷ்டத்திலும் சித்திரவதைகளிலும் தங்கள் காலத்தை தள்ளிக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறான சிறுவர்களை நாம் இன்றைய நாளில் நினைத்துப் பார்க்க வேண்டும். இதற்காக நாம் அவர்களுக்காக பிரார்த்திப்பது நம் கடமையாக இருக்கின்றது.

எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகை காப்பதற்கு தயாராகும் பாதுகாவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்கள். இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் வாக்கிற்கமைய சிறுவயதிலேயே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகின்றது. அதற்கமைய உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற யுத்தங்கள், உள்நாட்டு பிரச்சினைகள் என்பன அதிகளவில் நேரடியாக சிறுவர்களேயே பாதிக்கின்றது. மேலும் சமூகத்திலுள்ள சில விசமிகளின் செயற்பாடுகளால் சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்நிலையில் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனும் நோக்கோடு அவர்களை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களின் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென ஐக்கிய நாடுகள் சபை கடந்த 1989 ஆம் ஆண்டு முதல் சர்வதேச சிறுவர் தினத்தை பிரகடனப்படுத்தியது. எனினும் 1984 ஆம் ஆண்டிலேயே சிறுவர்கள் முதன் முதலில் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான கொள்கை வெளியிடப்பட்டது. அதன்பின்னர் 1959 ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர்களுக்கான சகல உரிமைகள் தொடர்பான தெளிவான கொள்கை பிரகடனம் வெளியிடப்பட்டது.

வாழ்வதற்கும் முன்னேற்றுவதற்குமான உரிமை, பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளும் உரிமை, பெற்றோரை தெரிந்துகொண்டு அவர்களது பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கான உரிமை, பெற்றோரிடமிருந்து தம்மை தனிமைப் படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை, கருத்தை வெளிப்படுத்தும் உரிமை, சிந்திப்பதற்கும் மனசாட்சிப்படி நடப்பதற்கும் சமயம் ஒன்றை பின்பற்றுவதற்குமான உரிமை, பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, சித்திரவதைகள், தண்டனைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை, சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை என சிறுவர்களுக்கு பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் உலகளாவிய ரீதியில் இவற்றில் அனைத்து உரிமைகளும் பாதுகாப்படுகின்றதா? என்பது கேள்விக் குறியான விடயம். இதனிடையே சிறுவர் உடல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகமென பல வழிகளில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறுவர் பாதுகாப்பு மீறல் என்பது "சிறுவர்களை அவர்களின் இயல்புகளுக்கும் தன்மைகளுக்கும் முரணாகப் பிழையாகப் பயன்படுத்துதல்" எனலாம். உலக சுகாதார நிறுவனம் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமை மீறல்கள் என்பதைக் கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. "சிறுவர்களை உடல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாகப் பாதிப்படையச் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர்களைச் சுரண்டல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல்" சிறுவர் பாதுகாப்பு மீறல் எனப்படும்.

பொதுவாக சிறுவர் பாதுகாப்பு மீறல்கள் பல்வேறு வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றது. உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், சமூக மற்றும் குடும்பத்தில் புறக்கணிப்பு, வேலைக்கு அமர்த்துதல், போதைக்கு அடிமையாகுதல், பாலியல் திருமணம் எனப் பல்வேறு கோணங்களில் சிறுவர் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் ஒவ்வொரு நாடுகளும் சிறுவர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்கள் பாதுகாக்க வேண்டியவர்கள் என்ற அடிப்படையில் அதற்கென பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. எனினும் இன்று உலகில் பல்வேறு நாடுகளில் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல், பாலியல், துஷ்பிரயோகம், கல்வியைத்தடுத்தல், சிறுவர்களைக் கடத்துதல் போன்ற பல முறையற்ற செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எனவே எமது நாட்டில் 14 வயதிற்கு கீழுள்ள சிறுவர்களை வேலைக்கமர்த்தலுக்கு எதிராக பல சட்டங்கள் அமுல் படுத்தப்பட்டுள்ளன. மேலும் 16 வயதிற்குட்பட்ட கட்டாயக்கல்வி அமுலாக்கமானது அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த பூமியில் வாழ்கின்ற மனித இனமான நாம் எதிர்காலத்திலும் நல்லதொரு உலகை கட்டியெழுப்ப வாய்ப்பளிக்க வேண்டிய கட்டாயமானதாகவும் சிறுவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை தடுத்து அவர்களை பாதுகாத்து நாளைய நல்ல உலகத்திற்கு இன்றே வழிவகுப்போம்.

# வீட்டின் முதுசங்களே முதியோர்



சர்வதேச முதியோர் தினம் இன்று

ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினமாகும். மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் நோக்கி அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆண்டுதோறும் ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

1990 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கமையவே இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதன் 'முதலாக 1991 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகெங்கும் வாழும்முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதும் அவர்களுக்கென ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதுமே இந்த நாளின் பிரதான நோக்கமாகும்.

இவ்விடத்தில் முதுமை என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தித்தல் வேண்டும். பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டோர் முதியோர் என வரையறுக்கப்பட்டாலும்கூட, முதுமை என்பது ஒரு நபரின் பிறப்பிலிருந்து தொடங்குகின்றது என்பர். ஒரு குழந்தையானது வளர்ந்து பெரிதாகும் ஒவ்வொரு காலகட்டத்திலும் முதுமை நிகழ்வு ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத நிலையாகும். முதுமையின் போது ஏற்படும் நிகழ்வுகளை விஞ்ஞான ரீதியில் எடுத்து நோக்குமிடத்து மூளை மற்றும் நரம்புமண்டல அமைப்பு முதுமையடையும் போது, மூளையின் நரம்புமண்டல அணுக்களின் எண்ணிக்கையானது குறைவடையத் தொடங்குகின்றது.

இழையச்-சீர்கேடு, தோல் சுருக்கம், தசை எடை குறைவு, புலன் குறைபாடு, உடல் அசைவுத் தன்மைக் குறைவு, இனப்பெருக்கத் தடை, உளவியல் பாதிப்புகள் என பல்வேறு முறைகளில் உடலியல் தொழிற்பாடு பாதிக்கப்படுவதனால் வயதானவர்களின் நடவடிக்கைகளில் வேகம் குறைந்து காணப்படுகின்றது.

ஞாபகசக்தி குறைவு, புதிய விடயங்களை கற்றுக் கொள்வதிலும் குறைவான வேகத்துடனேயே காணப்படுவர். 60 வயதிற்கு மேல் முதுகுத் தண்டில் உள்ள அணுக்கள் குறைய ஆரம்பிப்பதால் அவர்களின் உணர்வு சக்தி குறையத் தொடங்குகின்றது.

முதுமையடையும் பொழுது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது மெதுவாக குறைய ஆரம்பிக்கின்றது, இது பல நோய்த்தொற்றுகளுக்கு, குறிப்பாக இதய நோய், பக்கவாதம், மூட்டுவலி, புற்று நோய், நீரிழிவு நோய் போன்றவை பெரிதும் முதுமைப்படுத்தலின் காரணமாகவே ஏற்படுகிறது.

ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். புள்ளி விபரங்களைப் பார்க்கும் போது இலங்கையில் 48.3 சதவீதமான முதியோர்கள் தமது பிள்ளைகளின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர். ஓய்வூதியம் மூலம் 13.5 வீதத்தினரும் விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள் மூலம் 10.3 வீதத்தினரும் தமது சொத்துகளின் வருமானம் மூலம் 7.7 வீதத்தினரும் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

பிரபல்யம் மிக்க ஆங்கில மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் முதுமை எவ்வாறு உருவாகிறது? அதனை வரவேற்பது எப்படி? என்பதை இவ்வாறு இயப்பினார். ஒருமனிதன் தன் வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தை, பிறகு மாணவன் பின்னர் விடலைப்பருவம், தொழில் வாய்ப்பை பெற்றபின் குடும்பஸ்தன் ஆகின்றான். காலச்சக்கரத்தின் அபரிமித சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக் கண்ணாடி அணிந்து முகம் சுருங்கி, உடல் மெலிந்து பல், கண்பார்வை எல்லாம் அற்ற நிலையில் கூன் விழுந்து முதுமையாகி மறைவது தான் சரித்திரம் என்கிறார். எனவே முதுமையை மதித்து முதியோரைக் காப்போம்.

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த 300 மெற்றிக் தொன் அரிசி

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கையால் மீட்பு

**(கொழும்பு)**

**நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கிணங்க ஜா-எல, ஏக்கல பகுதியில் அமைந்துள்ள விலங்கு உணவு தயாரிப்பு தொழிற்சாலையொன்றுக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன சகிதம் சென்ற நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் களஞ்சியசாலையில் பதுக்கி வைத்திருந்த ஒரு தொகை அரிசியை மீட்டுள்ளனர்.**



300 மில்லியன் பெறுமதியான 300 மெற்றிக் தொன் அரிசி விலங்கு உணவு உற்பத்திக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

விலங்கு உணவு உற்பத்தி தொழிற்சாலைகளில் இவ்வாறு தானியங்கள் பதுக்கி வைப்பதன் காரணமாக நுகர்வோர் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகின்றனர்.

இதேவேளை உள்ளூர் உற்பத்தி அரசி மற்றும் உப உணவுப் பொருட்களை விலங்கு உணவு உற்பத்திக்கு பயன்படுத்தக் கூடாது என விசேட வர்த்தமானி அறிவித்தல் முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி களஞ்சியசாலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள நபர்கள் நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீட்பு நடவடிக்கையில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர், ஜா-எல பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் கம்பஹா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள் எனப் பலர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# கவனம் செலுத்தியிருந்தால் குண்டுத் தாக்குதலை தடுத்திருக்கலாம்

## விஜயதாச ராஜபக்ஷ சாட்சியம்

(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ்.என்ற இஸ்லாமிய அரசு அமைப்புடன் இலங்கையர்கள் கொண்டுள்ள தொடர்புகள் குறித்து தாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் முன்னைய அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியிருக்குமாக இருந்தால், உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் அழிவை தடுத்திருக்கலாம் என்று முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சாட்சியம் வழங்கினார்.

இந்தச் சாட்சியத்தை நேற்று முன்தினம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வழங்கினார்.




பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த குறித்த அறிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்புடன் தொடர்புடையவர்கள் பெயர்ப் பட்டியலில் தமது பெயர் எந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டது என்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், விஜயதாச ராஜபக்ஷவிடம் ஆணைக்குழுவின் முன் கேள்வி எழுப்பியபோதே விஜயதாச.ராஜபக்ஷ தமது கருத்தை வெளியிட்டார்.

அத்துடன் குறித்த பட்டியலில் இலங்கையின் அரசியல்வாதிகளான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலி போன்றோரின் பெயர்களையும் தாம் உள்ளடக்கியிருப்பதாக விஜயதாச ராஜபக்ஷ ஆணைக் குழுவின் முன் தெரிவித்தார்.

இதேவேளை அன்று பாராளுமன்றத்தில் குறித்த அறிக்கையைச் சமர்ப்பித்தபோது அதனை முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் கேள்விக்கு உட்படுத்தியதாகவும் விஜயதாச குறிப்பிட்டார். (2-7)

# தீப்பிடித்து எரிந்த மின்மாற்றி



(கொழும்பு)

கொழும்பு, ஆமர் வீதி பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றியொன்று நேற்று முற்பகல் தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீ விபத்தையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த மின் மாற்றியில் ஏற்பட்ட மின்னொழுக்குக் காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பு வீரர்கள் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அரசாங்கம் முக்கிய வேலைத்திட்டம்




(கொழும்பு)

சிறுவர்கள் துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளையுடைய வீடுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகக்கூடிய வீடுகள் மற்றும் இடங்களை வரைபடத்திற்கு உட்படுத்துவதே இதன் நோக்கம் என சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி, ஆரம்ப பாடசாலை, பாடசாலை அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை


(கொழும்பு)

நிலையானதும் புதுப்பிக்கத்தக்கதுமான எரிசக்தி உற்பத்திக்கான இலக்குகளை அடைய தேவையான கொள்கைகளை வகுப்பதே தமது முதன்மை இலக்காகும் என சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் கார்பன் வாயுவின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்களை புதிய அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினர்.


மேலும், இவ்வாறான இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கிலேயே, ஜனாதிபதி தனியான இராஜாங்க அமைச்சொன்றை நிறுவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அனைத்துத் துறைகளுக்கும் அவசியமான, நிலையானதும் புதுப்பிக்கத்தக்கதுமான எரிசக்தி உற்பத்தித் துறையில், புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகப்படுத்தப்படுவது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)



# பாரதம்

## பாபர் மசூதி வழக்கு; குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை





(அயோத்தி)

இந்தியாவில் அயோத்தியில் உள்ள பாபர் மசூதி 1992 இல் இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடு தலை செய்யப்படுவதாக இந் திய மத்திய புலனாய்வுப் பிரிவு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.

பாபர் மசூதி இடிப்பு முன் னரே திட்டமிடப்படவில்லை என்றும், குற்றம்சாட்டப்பட்ட வர்களுக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப் பிட்டுள்ளார்.

இன்றைய தீர்ப்பின்படி குற் றம்சாட்டப்பட்ட 48 பேரில் உயி ருடன் இருக்கும் 32 பேரும் விடுதலை ஆகின்றனர். அவர் களில் இந்திய முன்னாள் துணை பிரதமர் எல்.கே.அத் வானி, உத்தரப்பிரதேச முன் னாள் முதல்வர் கல்யாண் சிங் மற்றும் பிற பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள் முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, வினய் கட்டியார் மற்றும் சாக்ஷி மகாராஜ் மற்றும் பலர் விடு தலையாகியுள்ளனர்.


அயோத்தியில் உள்ள பாபர் மசூதி 1992 டிசம்பர் 6 அன்று இடிக்கப்பட்டு கிட் டத்தட்ட 28 ஆண்டுகள் ஆகின்றன.

அயோத்தி பாபர் மசூதியை மைய மாகக் கொண்டு இரண்டு வழக்குகள் இருந்தன. ஒன்று சர்ச்சைக்குரிய நிலம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான "சிவில்" வழக்கு. இன் னொன்று மசூதி இடிப்புக்கு காரண மானவர்கள் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ளவர்கள் மீதான "குற்றவியல்" வழக்கு.

சிவில் வழக்கில் ஏற்கனவே இந்துக்கள் தரப்புக்கு சாதகமான தீர்ப்பு வந்து அங்கு இராமர் கோயில் கட்டு வதற்கான பணிகள் நடந்து வருகின் றன. குற்றவியல் வழக்கில் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு நேற்று வெளியா கியுள்ளது. சர்ச்சைக்குரிய நிலம் இந் துக்களுக்கே சொந்தம் என்றாலும், மசூதி இடிக்கப்பட்டது தவறு என்று உச்ச நீதி மன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

மேலும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி இடிக்கப்பட்ட மசூதிக்கு பதிலாக வேறு இடத்தில் மசூதியை கட்டிக் கொள்ள 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.(2)

## மனித நேயமிக்க சேவையை பாராட்டி விருது வழங்கி அங்கீகரித்த ஐ.நா



(டில்லி)

கொரோனா ஊரடங்கு காலத்தில், பல்வேறு உதவி களை செய்த இந்தி நடிகர் சோனு சூட்டுக்கு, ஐ.நாவின் சிறப்பு மனிதநேய செயலுக் கான விருது வழங்கப்பட்டுள் ளது.

கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக நாடு முழு வதும் கடந்த மார்ச் மாதம் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதில் இருந்து. தற்போது வரை தன் னால் இயன்ற உதவிகளை நடிகர் சோனு சூட் செய்து வரு கிறார்.

குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்கள் சொந்த ஊர் செல்ல பேருந்து வசதி செய்து கொடுத்தது, ரஷ்யாவில் சிக் கித்தவித்த தமிழகத்தை சேர் ந்த மருத்துவ மாணவர்கள் தாயகம் திரும்ப விமானம் ஏற்பாடு செய்து தந்தது, விவ சாயிக்கு டிராக்டர் வாங்கி கொடு த்தது, ஏழைகளுக்கு உதவி செய்வது என இவர் செய்த உதவிகள் ஏராளம்.

இந்நிலையில் சோனுசூட்டின் மனிதநேயமிக்க சேவையை பாராட்டி, ஐ.நா. மேம்பாட்டு திட்டத்தின் சிறப்பு மனிதநேய செயலுக்கான விருது வழங்கப் பட்டுள்ளது.

இவ்விருதினை இதற்கு முன், பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்காம், ஹொலிவுட் பிரபலங்களான ஏஞ்சலினா ஜோலி, லியோனார்டோ டிகாப் ரியோ, பொலிவுட் நடிகை பிரி யங்கா சோப்ரா ஆகியோர் பெற் றுள்ளனர். (2)

## நேரடி விவாதத்தில் 'கோமாளி' என ட்ரம்பை அழைத்த ஜோ பிடன்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர் தல் பிரசாரத்தின் ஒரு பகுதி யாக நடைபெற்ற நேரடி விவா தத்தின்போது, ஜோ பிடன், ட்ரம்பை கோமாளி என அழைத் ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவில் ஜனாதிப தித் தேர்தல் பிரசாரம் விறு விறுப்படைந்துள்ளது. ஜன நாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடனும் குடியரசுக் கட்சி வேட் பாளர் ட்ரம்பும் ஒருவரை ஒரு வர் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில் இறுதிக்கட்ட பிரசாரமான வேட்பாளர்கள் நேருக்கு நேர் விவாதம் தொட ங்கி உள்ளது.

ஒஹியோ மாநிலம் கிளீவ் லேண்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்ற முதல் நேரடி விவாதத் தில் ட்ரம்பும் -ஜோ பிடனும் அனல் தெறிக்கும் விவாதத்தில் ஈடுபட்டனர்.

விவாதத்தில் கருத்துப் பரி மாற்றம் உச்சத்தை அடைந்த தால் பதற்றம் ஏற்பட்டது. அதில் பிடன் ட்ரம்பை ஒரு "கோமாளி" என்று அழைத்தார். "இந்த கோமாளியிடம் இருந்து எந்த வார்த்தையையும் பெறுவது கடினம் - இந்த நபரை மன் னியுங்கள்" என்று பிடன் தெரி வித்தார். (2)

## 10 லட்சம் என்பது வெறு


## கொரோனாவிற்கு பலி

### கவலை வெளியிட்ட குட்டேர

(நியூயோர்க்)......................

உலகம் முழுவதும் கொரோனாவால் 10 சம் பேர் பலியாகி இருப்பது வேதனை அ மைல்கல் என்று ஐ.நா. பொதுச்செயலாள டனியோ குட்டேரஸ் கவலை தெரிவித்துள்ள

நமது உலகம் ஒரு வேத னையான மைல் கல்லை எட்டி உள்ளது. கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயில் இரு ந்து 10 இலட்சம் உயிர்களை இழந்துள்ளது. இது மனதை நெருடும் எண்ணிக்கை ஆகும். ஆனாலும் தனிப்பட்ட ஒரு உயி ரைக்கூட நாம் ஒருபோதும் இழக் கக்கூடாது. அவர்கள் நமது தந்தைகள், தாய்மார்கள், மனைவிகள், கண வர்கள், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள். இந்த நோயின் காட்டு மிராண்டித்தனத்தால் வலி பெருகி



## செவ்வாய்க்கிரகத்தில் 3 ஏரிகள் கண்

(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தில் தென் துருவத் திற்கு அருகில் நிலத்திற்கு கீழே மூன்று ஏரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமியைத் தவிர்த்து பிற கோள்களில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியம் உள் ளதா? என்ற ஆராய்ச்சியில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது இந்த கண்டு பிடிப்பு.

தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ள இந்த மூன்று ஏரிக ளில் உள்ள தண்ணீரில் உப் புத் தன்மை அதிகம் இருப்ப தால் அங்கு நுண்ணுயிரிகள் வாழ்வதற்கான சாத்தியம் உள் ளதா? என்பது குறித்து ஆராய்ச் சியாளர்கள் ஆய்வுகள் மேற் கொண்டு வருகின்றனர்.


கடந்த 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் செவ்வாய்க்கிரகத்தை சுற்றிவருகிறது ஐரோப்பிய விண்வெளி மையத்திற்கு சொந்தமான மார்ஸ் எக்ஸ்பிரஸ். அந்த ஆய்வுக்கலத்தின் ரேடரின் தரவுகளைக் கொண்டு

# வெளிநாடு



# உணவின்றி தவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சிரியாவில் 46 இலட்சமாக உயர்வு

## சர்வதேசம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் -சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கை-



(டமாஸ்கஸ்)

சிரியாவில் கடந்த 6 மாதத்தில் நாடு முழுவதும் உணவு இல்லாமல் தவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையானது 46 இலட்சமாக உயர்ந்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்நாட்டுப் போர், ஊழல், மேற்கிந்திய பொருளாதாரத் தடைகள் மற்றும் அண்டை நாடான லெபனானின் பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகளால் கடந்த 10 ஆண்டுகளில் 4 இலட்சம் பேர் பலியாகியுள்ளனர். மேலும் அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பாதி பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

சில மாதத்திற்கு முன், உள்ளூர் நாணயம் செயலிழந்ததால், பல குழந்தைகள் உணவு கூட வாங்க முடியாமல் தவித்து வருகின்றனர். இதனிடையே போரினால் நிலைகுலைந்துள்ள சிரியாவில் கொரோனாத் தொற்றும் பரவுவதால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது.


இந்த நிலையில் சிரியாவில் கடந்த 6 மாதத்தில் நாடு முழுவதும் உணவு இல்லாமல் தவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையானது 46 இலட்சமாக உயர்ந்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் வாழும் 8 குழந்தைகளில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாட்டால் வாழ்நாள் முழுவதும் உடல்நலக் குறைவை எதிர்கொள்கின்றனர். குழந்தைகளைக் காப்பாற்ற சர்வதேச சமூகம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (2)

# ...றும் எண்ணிக்கையல்ல ...லியான எம் உயிர்களே

...டேரஸ்

...ல் 10 இலட் ... அளிக்கும் ...மாளர் ஆன ...ள்ளார்.



உள்ளது. இன்னும் வைரஸ் பரவுதலும், வேலை இழப்பு ஏற்படுதலும், படிப்பு சீர்குலைதலும், வாழ்வை கொந்தளிக்க வைத்துள்ளது. இதற்கு கண் எதிரே முடிவும் இல்லை.

நாம் இந்த சவாலை கடந்து வர முடியும். ஆனால் நாம் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பொறுப்பான தலைமை முக்கியம், அறிவியல் முக்கியம், ஒத்துழைப்பு முக்கியம். தனிமனித இடைவெளியை அனைவரும் பராமரிக்க வேண்டும். எல்லோரும் முகக்கவசம் அணிய வேண்டும். அனைவரும் அடிக்கடி கழுவி கைசுத்தம் காக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# நியூயோர்க்கில் பாடசாலைகள் திறப்பு

(நியூயோர்க்)

கொரோனாவுக்குப் பின் நியூயோர்க் நகரில் தொடக்க பாடசாலைகள் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டன.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலுக்குப் பின்னர் பள்ளிகள் மூடப்பட்டன. இந்த நிலையில் நியூயோர்க் நகரில் தொடக்க பாடசாலைகள் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டன.



இரு முறை தாமதிக்கப்பட்ட நிலையில், இப்போது பாடசாலைகள் திறக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (2)

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சென்ற ஆண்டை விட அதிகரிப்பு

(டில்லி)

இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7 சதவீதம் அதிகரித்திருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிராக 4 இலட்சத்து 5 ஆயிரத்து 861 குற்றங்கள் பதிவாகியுள்ளன. இது 2018 ஆம் ஆண்டைவிட ஏழு சதவீதத்திற்கும் மேலானது என தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள சமீபத்திய புள்ளிவிபரம் காட்டுகிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் என்.சி.ஆர்.பி வெளியிட்டுள்ள "இந்தியாவில் குற்றங்கள் -2019" அறிக்கையில் கடந்த ஆண்டைவிட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7.3 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. (2)

# ...கண்டுபிடிப்பு!

செவ்வாய்க்கிரகத்தின் தென்துருவத்தின் நிலப்பரப்புக்கு 1.5 கிலோமீற்றர் கீழே சுமார் 20 கிலோமீற்றர் அகலமுள்ள ஏரி இருப்பதாக கடந்த 2018 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தவகையில், தற்போது மீண்டும் 3 ஏரிகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2010 மற்றும் 2019க்கு இடையில் சேகரிக்கப்பட்ட 134 ரேடார் குறிப்புகளை கொண்ட தரவுத் தொகுப்பை ஆய்வு செய்ததன் மூலம் இதுபோன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

"2018 ஆம் ஆண்டு நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் கிடைத்த தகவலை உறுதி செய்து இந்த மூன்று புதிய பிரகாசமான ஏரி பகுதிகளையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். பிரதான ஏரியானது திரவ நிலையில் நீர் கொண்ட சிறிய அமைப்புகளால் சூழப்பட்டுள்ளது. அந்த ஏரிகள் ஒன்றுக்கொன்று இணைந்துள்ளதா? என்பது குறித்து இன்னும் தெளிவுபடுத்த முடியவில்லை. செவ்வாய்க்கிரகத்தில் உயிரிகள் வாழ முடியுமா? என்பது அங்கு காணப்படும் நீர் ஆதாரங்கள் எவ்வளவு உப்புத்தன்மை கொண்டவை என்பதைப்பொறுத்தே அமையும்" என ஆய்வுக் குழு தகவல் வெளியிட்டுள்ளது. (2)



# எதிர்காலத்தை பாதிக்கும் திருத்தங்கள் குறித்து கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும்

(கொழும்பு)

**ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்க்கப் போவதாக நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**



(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடல்களை மேற்கொள்வது அரசைக் கவிழ்ப்பதற்கோ அல்லது தற்போதைய அரசை விமர்சனம் செய்வதற்கோ இல்லை என்று முன்னாள் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

உத்தேச திருத்தங்கள் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள கரு ஜயசூரிய, இதன் காரணமாக இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கும் நாட்டு மக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நாட்டைப் பேரழிவை நோக்கித் தள்ளும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் சபர்நாயகர், 20 ஆவது திருத்தம் ஜனநாயகக் கொள்கைகளை அழித்து விடும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2)

# பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற சகல நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்

## எதிர்காலத்திட்டம் பற்றிய கலந்துரையாடலில் கோட்டா



(ஹற்றன்)

தோட்ட மக்கள் வாழும் சூழலிலிருந்தே அவர்கது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். வீடமைப்பு திட்டமிடலை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதன் மூலம் நிர்மாணப் பணிகளின் தரத்தை சிறப்பாகப் பேண முடியுமென்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்ததாக தனியார் தோட்ட நிறுவனங்களும் தமது பொறுப்பையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தோட்ட வீடுகள் மற்றும் தோட்ட வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, சுகாதாரம், கல்வி, விவசாயம், வீடமைப்பு, விளையாட்டு உள்ளிட்ட அமைச்சுக்களின் உதவியைப் பெற்று, தோட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தோட்ட முன்பள்ளி பாடசாலைகள், ஆரம்ப பாடசாலைகள், சுகாதார தேவைகளுக்காக மருத்துவ நிலையங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தோட்டங்களை அண்மித்து வாழும் இளைஞர், யுவதிகளுக்கு NVQ மட்ட சான்றிதழை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தொழில் பயிற்சியை வழங்கி, தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் அவசியம் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தோட்டங்களை அண்மித்ததாக உள்ள 438 சுகாதார நிலையங்களை அரசின் கீழ் கொண்டு வந்து, சிறந்த சேவையை தோட்ட மக்களுக்காக துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பண்டாரவளை, ஹற்றன், நுவரெலியா மற்றும் எல்ல பிரதேசங்களை மையப்படுத்தி சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

தோட்டங்களும் கிராமங்களும் துண்டிக்கப்படாத வகையில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிகழ்காலம் நம் கையில்

ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர். 3250 பேரை அவர் சந்தித்தார். அவர்களிடமெல்லாம் ஒரே கேள்வியைக் கேட்டார். "நீங்கள் எதற்காக வாழ்கின்றீர்கள்?" இது அவர் கேட்ட கேள்வி. அதிலே 92 சதவீதம் பேர் ஒரே மாதிரியான பதிலைத்தான் சொல்லியிருக்கின்றார்கள்.

"நாளைக்கு நல்லபடியாக வாழ்வதற்காக நம்பிக்கையோடு இன்றைக்கு காலம் தள்ளிக் கொண்டிருக்கின்றோம்" என்றுதான் அவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கின்றார்கள்.

இந்த உலகத்திலே சந்தோசமாக வாழ்பவர்களை விட சந்தோசமாக வாழப் போகின்றோம் என்கின்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் அதிகம்.

எதிர்காலத்திலே நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அவஸ்தைப்படுகின்றவர்கள் அதிகம். ஆனால் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள், எதிர்காலம் என்பது உண்மையிலேயே கிடையாது. இது ஏதோ சித்தப் பிரமையிலே சொல்கின்றதாக நீங்கள் நினைத்து விடக் கூடாது.

எதிர்காலம் என்பது ஒரு கற்பனை. அதிலே நீங்கள் வாழ முடியாது. அதிலே நீங்கள் வாழ்கின்ற போது அது உங்களுக்கு நிகழ்காலமாகி விடுகின்றது. இப்பொழுது உதாரணத்திற்கு அடுத்த வருடம், இதே மாதம், இதே திகதி.அந்த நாள் இப்பொழுது எங்களுக்கு எதிர்காலம். அதை கற்பனையில் தான் பார்க்க முடியும்.

அடுத்த வருடம், அந்த நாள் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அன்றைக்கு நாம் வாழப் போகின்றோம். நாம் வாழ்கின்ற அந்த நாள் நமக்கு நிகழ்காலம்.

சரி...இப்படியே சொல்லிக் கொண்டு போனால் எனக்கு திடீர் என்று இன்றைக்கு என்னமோ ஆகிவிட்டது என்று யோசிக்க ஆரம்பித்து விடுவீர்கள். அதனாலே இந்தக் கதையைக் கேளுங்கள். ஒரு பெரிய செல்வந்தர் முகத்தை மிகவும் கம்பீரமாக வைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்தார். அதே நேரத்திலே மிகவும் தீவிரமான சிந்தனையிலே இருந்ததால் வேறு தோன்றியது. அவர் மனைவி பார்த்தார். "என்னங்க என்னவோ மிகவும் தீவிரமாக யோசிப்பது போல் தெரிகின்றது?" இன்றைக்கு இவ்வளவு தாமதமாக வேறு வருகின் றீர்கள் என்ன காரணம் ?" என்று கேட்டார்.

"அதுவா... எங்களுடன் ஏழு தலைமுறைகளுக்கு தேவையான ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருந்தேன். அதுதான் நேரத்துடன் வீட்டுக்கு வர முடியவில்லை. என்னுடைய சிந்தனைக்கும் அதுதான் காரணம்" என்றார் அவர்.

அவருடைய மனைவியோ அறிவாளி. அதனால் "வரப்போகின்ற ஏழு தலைமுறைகளைப் பற்றி இவர் இப்பொழுது கவலைப்படுவது அறியாமை" என்று அந்த அம்மாவுக்கு தோன்றியது.

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தார்.அதற்குப்பிறகு மெதுவாக அவர்கள் கணவரிடம் போனார்கள்.

"இதோ பாருங்கள் எங்கள் வீட்டுக்கு வெளியே குடிசையிலே ஒரு சந்நியாசி இருக்கின்றார்.நீங்கள் போய் அவரிடம் இந்தச் சாப்பாட்டை கொடுத்துவிட்டு வாருங்களேன் என்று சொன்னார்கள். அவரோ வேண்டா வெறுப்போடு கிளம்பினார். சரி..கொடு போய்விட்டு வருகிறேன்" சொல்லிவிட்டு சாப்பாட்டை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

அந்த சந்நியாசியிடம் போனார். சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். செல்வந்தர் கையிலே சாப்பாடு.

"நான் ஏற்கனவே என்னுடைய சாப்பாட்டை சாப்பிட்டு முடித்துவிட்டேனே" என்றார் சந்நியாசி.

"அப்படி என்றால் இதை மாலைச் சாப்பாட்டுக்கு வைத்துக் கொள்ளுங்களேன்" என்றார் செல்வந்தர்.

சந்நியாசியின் இந்தச் செயல் பணக்காரருடைய சிந்தனையில் ஒரு புது திருப்பத்தை உண்டு பண்ணியது.யோசித்துப் பார்த்தார்.

"மாலைச்சாப்பாட்டை பற்றிக்கூட கவலைப்படாத இந்த சந்நியாசி தான் எவ்வளவு விசித்திரமானவர். நானோ ஏழு தலைமுறைக்காக இப்பொழுதே ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றேன். இவரோ அடுத்த வேளையைப் பற்றிக் கூட கொஞ்சமும் அலட்டிக்காமல் இருக்கின்றாரே"

செல்வந்தர் முகத்திலே சிரிப்பு வந்தது.

இந்தக் கதையிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்.

நிகழ்காலம் என்பதுதான் எங்களிடம் இருக்கின்றது.அதிலே நல்லபடியாக வாழ்வதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.அதற்காக எதிர்காலத்தை பற்றிய பொறுப்பு நமக்குத் தேவையில்லை என்று முடிவு கட்டிவிடக் கூடாது. அது வேறு இது வேறு.

இந்த தத்துவத்தை அரைகுறையாக புரிந்து கொண்ட ஒருத்தர் என்ன செய்தார் தெரியுமா?

தத்துவத்தை சொன்னவரிடம் போய் 100 ரூபா கடன் வாங்கினார்.

இவர் கடனை கொடுத்துவிட்டு எப்பொழுது திருப்பித் தருவீர்கள்? என்று கேட்டார்.

எதிர்காலத்திலே திருப்பித் தருவேன். அதைப் பற்றி இப்பவே எதற்கு நினைக்க வேண்டும். மறந்திடுங்கள் என்று சொல்லி விட்டு புறப்பட்டு போய்விட்டார்.

# வெட்டுப்புள்ளி எப்போது வெளியாகும்?

(கொழும்பு)

இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே அறிவித்துள்ளார்.

அதற்கு முன்னர் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுடன் அது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக உள்ளீர்ப்பிற்கான 36 தேர்வுகளின் பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் இம்முறை சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 10 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இராணுவ சீருடையுடன் பிறந்தநாள் கொண்டாட்டம் அழகுக் கலை நிபுணரைக் கைது செய்யுங்கள்

### வலுக்கும் எதிர்ப்பு



(கொழும்பு)

இராணுவ சீருடைக்கு நிகரான உடையை அணிந்து பிறந்த நாள் விருந்தில் கலந்து கொண்ட அழகுக்கலை நிபுணர் சந்திமால் ஜயசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, சட்டத்தரணிகள் சிலர் நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தனர்.

வைபவத்தின் போது அணிந்திருந்த இராணுவ இலச்சினையுடன் கூடிய ஆடை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகள் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே சந்திமால் ஜயசிங்க தனது பிறந்த நாள் சம்பந்தமாக தனது முகநூலில் வெளியிட்டிருந்த புகைப்படத்தை தற்போது நீக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டம்



(கொழும்பு)

சர்வதேச கடலோர தூய்மை தினத்தை முன்னிட்டு, குப்பையற்ற கடல் சுத்தமான கடற்கரை என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற தேசிய கடல்வள பாதுகாப்பு வாரத்துக்கு இணையாக இலங்கை கடற்படை தீவைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் பல தூய்மைப்படுத்தும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி கல்கிஸை கடற்கரையில் தொடங்கி கடந்த 25 ஆம் திகதி வரை நடைபெற்ற தேசிய கடல்சார் பாதுகாப்பு வாரத்தில் நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்கரைகள் சுத்தம் செய்யப்பட்டன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கையில் இணைந்த கடற்படை, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் வழிகாட்டுதலின் பேரில், வடக்கு, கிழக்கு, மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு, வடமத்திய மற்றும் தென் கடற்படைக் கட்டளைகளை மையமாகக் கொண்டு தொடர்ச்சியான கடலோர தூய்மைப்படுத்தும் திட்டங்களை நடத்தியது.

இந்தத் திட்டங்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் மறுசுழற்சி, சதுப்பு நிலங்களை நடவு செய்தல், பவளங்களை மீண்டும் நடவு செய்தல், மீன்பிடித் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்காக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பது மற்றும் மீன்பிடி சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கடற்படை தெரிவித்துள்ளது. (ஜ-4)

## திருமலை எண்ணெய்க் குதங்களை மீள ஒப்படைக்குமா இந்தியா?

### ஆரம்பமானது பேச்சு



(கொழும்பு)

திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களை மீளவும் பெற்றுக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இந்திய அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீண்டும் இலங்கைக்கு பெற்றுக் கொள்வது குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது இந்திய அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அது குறித்து இப்போது பேசுவது பொருத்தமில்லை. இது பேச்சுவார்த்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுகிறது.


இந்தியத் தூதரகமும் எம்முடன் ஒத்துழைக்கின்றனர். இந்த எண்ணெய்க் குதங்கள் லங்கா IOC நிறுவனத்துக்கே வழங்கப்பட்டுள்ளன. எனினும், இது இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றில் செல்வாக்குச்செலுத்தும்.

அத்துடன்., அரசியல் ரீதியான முக்கியத்துவம் இதில் காணப்படுகிறது. ஆகவே, நாம் முதலில் இந்திய அரசாங்கத்துடன் பேச வேண்டும். பின்னர் குறித்த நிறுவனத்துடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எம்மால் முடியும்” என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்திலும் இந்த எண்ணெய்க்குதங்களை மீளப் பெற்றுக் கொள்ள பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது 'தோல்வியில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேசிய பாரம்பரிய தளமாக மாறும் “ஒன்பது வானங்களின் பாலம்”

(கொழும்பு)



பதுளை - தெமோதர புகையிரதப் பாதையில் காணப்படும் ஒன்பது வளைவுகளைக் கொண்ட பாலத்தின் தேசிய பாரம்பரிய தளமாக வர்த்தமானி செய்யப்படும் என்றும் அதற்காக நினைவு முத்திரை உருவாக்கப்படும் என்றும் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கிராமிய கலை மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

ஊவா மாகாண சபை ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் அழைப்பின் பேரில் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், பாலத்தை பாதுகாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக பாலத்தை தேசிய பாரம்பரியத் தளமாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளார் என மேலும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, கண்டியன் புகையிரதக் கட்டுமானத்துடன் 1921 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தப் பாலம் 300 அடி நீளமும் 25 அடி அகலமும் 80 அடி உயரமும் கொண்டதாகும்.

ஒன்பது வளைவு கொண்ட இந்தப் பாலம் கல், செங்கல் மற்றும் சீமெந்து ஆகியவற்றால் ஆனது. இந்த பாலம் “ஒன்பது வானங்களின் பாலம்” என்றும் அழைக்கப்படுகிறது. (ஜ-4)

## கொள்கலன்கள் திருப்பியனுப்பிய விவகாரம் பாராட்டுத் தெரிவித்தார் சொல்ஹெய்ம்

(லண்டன்)


இலங்கைக்கு சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்ட 21 கழிவுப்பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை மீண்டும் பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பிய செயற்பாடு தொடர்பில் நோர்வேயின் முன்னாள் இராஜதந்திரி எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கு தனது பாராட்டை தெரிவித்தார்.

கழிவுப்பொருள் கொள்கலன்கள் இலங்கையிலிருந்து மீண்டும் ஐக்கிய இராச்சியத்திற்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் சர்வதேச ஆங்கில ஊடகமொன்றில் வெளியான செய்தியை மேற்கோள்காட்டி எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டி பதிவிட்டுள்ளார். (ஜ-4)

# கடல் புறா

## எத்தனை படைக்கலங்கள்!

காலத்தின் பதிவு




கணக்கற்ற போர்முனைகளிலும் ஆபத்தான எத்தனையோ இதர சூழ் நிலைகளிலும் அச்சத்துக்கு அறவே இடம் கொடாத கருணாகர பல்லவன் அன்று அந்த மாளிகைத் தளத்தின் மேலறையில் பஞ்செனெ நடந்து வந்த அஞ்சன விழியாளொருத்தி அறைக் கதவைத் தாளிட்டதும் பெரும் திகில் வசப்பட்டு, தான் ஒளிந் திருந்த திரைச்சீலையை இடது கையால் இறுகப் பிடித்துக்கொண்ட தல்லாமல், எல்லை மீறிய அச்சத் தின் விளைவாகக் கண்களையும் மூடிக்கொண்டு விட்டானாதலால், அடுத்து நடந்தது என்ன என்பதை அறியச் சிறிதும் சக்தியற்றவனா னான்.

ஊனக்கண்கள் மூடிவிடும் போது திறக்கும் சுபாவமுள்ள அவன் மனக்கண்கள் மட்டும் நன்றாக மலர் ந்து புதுப்புதுக் கற்பனைகளைக் கிளப்பிவிட்டதால், 'நான் இருப்பதை அறிந்தவுடன் இந்த அழகி கதறு வாள். மாளிகைக் காவலர் வருவார் கள். ஆகவே மேலும் சண்டை தான்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்ட கருணாகர பல்ல வன், அவள் கூச்சலை எதிர்பார்த்து இருந்த இடத்திலேயே அசைவற்று நின்றான்.

ஆடையைக் களைய முற் பட்ட அந்த ஆரணங்கு விளைவித்ததர் மசங்கடமான இந்த நிலையிலி ருந்து தப்பிவிடச் சீக்கிரம் காவலர் வந்து சண்டை துவங்கிவிட்டால்கூட மிகவும் நல்லது என்நினைத்து நின்ற இளையபல்லவன், விநாடிகள் பல ஆகியும் அறையில் கூச்சல் ஏதும் இல்லாததை எண்ணிப் பார்த்து விய ப்பின் வசப்பட்டுக் கண்களைத் திற க்கலாமா? வேண்டாமா? என்று தத்தளித்து நின்ற சமயத்தில், "வா வெளியே!" என்று அதிகாரம் தது ம்பி நின்ற சொற்களிரண்டு அவன் இரண்டு கண்களையும் சரேலெ னத் திறந்துவிட்டாலும், இதய உறு தியை மட்டும் மேலும் குலைக் கவேசெய்தன.

ஆண் மகனொருவன் அறை யில் மறைந்திருக்கிறான் என்பதை அறிந்ததால் அந்த ஏந்திழை கதறுவாள் என்று எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக, அவள் வெகு நிதானமாகவும் அச்சமில்லா மலும் அதிகாரத்துடனும் தன்னை வெளியே வரும்படி அழைத்ததைக் கேட்டவுடன் வியப்பின் எல்லையை எய்திய இளையபல்லவன், குனிந்த தலையை நிமிர்த்தித் திரைச் சீலைக்கு மேல் எட்டிப் பார்த்துக் கண்களை அகல விரித்தான். அவன் எதிரே விரிந்தது ஒரு மோகன உலகம்.

அறை விளக்கின் பொன்னிற வெளிச்சத்துடன் அறைக்கு வெளி யேயிருந்து சாளரத்தின் மூலம் பாய்ந்து வந்த வெண்மதியில் வெள்ளிக் கிரணங்களும் கலந்து கொண்டதால் பொன்னும் வெள்ளி யும் இணைந்த ஒரு மாய உலகம் அந்த அறையில் சிருஷ்டிக்கப்பட்டி ருந்ததையும், மயக்கம் தரும் அந்த ஒளிகளின் இணைப்பிலே புதிதாக உதயமான மாயதேவதைபோல் இதயத்தைக் கலங்க வைக்கும் எழிலுடன் அந்தப் பெண் கையி லொரு வாளையும் ஏந்தி நின்று கொண்டிருந்ததையும் கண்ட கரு ணாகரபல்லவன், தானிருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் அறவே மறந்தான்.

அவன் மனக் கண்ணில் இரு ந்து பாலூர்ப் பெருந் துறை மறைந் தது, சுங்கச்சாவடி மறைந்தது, துரத்தி வந்த காவலர் மறைந்தனர், நிலைத்து நின்றது எதிரே வாளேந்திப் போர்க்கோலத்துடன் தோற்றமளித்த அந்த மோகன பிம்பம் ஒன்றுதான்.

விளக்குகளின் பொன்னொளியும் வெண்மதியின் வெண்ணொளியும் கலந்து அவள் மீது பாய்ந்தபோ திலும் கலப்படத்தை விட அசல் சிறந்தது என்பதை அறிவு றுத்த முற்பட்டதுபோல் எக்கலப்பு மற்ற சொர்ணமென அவள் மேனி சற்றே மஞ்சளோடிப் பளிச்சிட்டதைக் கண்ட இளையபல்லவன், இப்படி யும் ஒரு நிறம் சிருஷ்டியில் இருக் கிறதா? என்று வியந்தான்.

அவள் சேலை இடையில் நன் றாக இழுத்துச் சுற்றப்பட்டிருந்தாலும் மடிப்புகள் நன்றாக அமையாமல் ஆங்காங்கு அலங்கோலமாகத் தொங்கியதால் பழைய ஆடையைக் களைய முற்பட்ட துமே திரைக்குப் பின்னால் தானிரு ப்பதை அவள் அறிந்திருக்க வேண்டு மென்றும் சேலையைச் சரேலென்று எடுத்து அவசர அவசரமாகச் சுற்றிக் கொண்டிருக்கவேண்டுமென்றும் ஊகித்துக் கொண்டானானாலும், அப் படி அலங்கோலமாகச் சேலையை அவள் சுற்றிக்கொண்டிருந்ததே அவ ளுக்கு எத்தனை அழகாயிருந்தது என்பதை எண்ணிப் பார்த்த அந்தப் பல்லவவாலிபன் 'அடுக்கடுக்காகக் கொசுவிப் பட்டைகளை ஒட்டிப் புனை யப்படும் ஆடையில் இருப்பதைவிட, அலங்கோல ஆடையில் பெண்க ளின் அழகு எத்தனை வசீகரத்தைப் பெறு கிறது! அப்படியிருக்கப் பெண்கள் எதற் காக ஆடை புனைவதற்கு அத்தனை சிரமப்பட வேண்டும்? என்று தன் னைத் தானே கேட்டுக்கொண் டான்.

ஆடை, சிறிது அலங்கோலப் பட்டிருந்த போதிலும் கழுத்தருகில் அது நன்றாகச் சுற்றிவளைக்கப் பட்டிருந்ததையும், கழுத்தைச் சுற்றி வந்த மேலாடை நன்றாக இழுத்தும் இடுப்பில் செருகப்பட்டதால் கழுத்தும் அதற்குக் கீழே இரண்டங்குலமே கண்களுக்குப் புலனானதையும் கண்ட கருணாகரபல்லவன், நெறி மிகுந்த ஒரு பெண்ணிடம் தான் சிக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

அப்படி உணர்ந்தும்கூட, புஷ்பத் திலிருந்து மீள இஷ்டப்படாத வண்டுகளைப்போல் அவன் கண் கள் புஷ்பத்தினும் மிருதுவாகத் தோன்றிய அவளை வட்டமிட்டன. மேலாடை நன்றாக இழுத்துச் சுற் றப்பட்டிருந்த காரணத்தாலேயே மறைவிலும் நிறைவு பெற்றுத் தெரிந்த அழகு, இளைய பல்ல வனின் உடலைக் கல்லாகச் சமைத்து விட்டதென்றாலும், அவன் இதயத் திற்கு மட்டும் புரவி வேகத்தைக் கொடுத்து ஓடச் செய்தது.

விநாடிகள் இரண்டொன்று ஓடி யும், நேராக அந்த அழகியைப் பார் க்கச் சக்தியற்றதால் மார்பை வளை த்து ஓடிய சேலையையும், அந்தச் சேலையிலிருந்து இடைவெளி கொடுத்து பளிச்செனத் தெரிந்த இடைப் பிரதேசத்தையும் பார்த்த கருணாகரபல்லவன் வாளை ஏந்தி நின்ற அவள் கையையும் பார்த்து இத்தனை மெலிந்து குழைந்து கிடக்கும் இந்த இடையை உடை யவளுக்கு இத்தனை உறுதியான கை எங்கிருந்து வந்தது என்று எண்ணிப் பார்த்தான். அத்துடன் வாளைப் பிடித்து நீண்டு பூவின் இதழ்கள் போலிருந்த அவள் விரல் களையும் கண்ட அவன், 'மென் மைக்கும் கடினத்துக்கும் இயற்கை ஏதோ சம்பந்தத்தை ஏற்படுத்தியி ருகிறது. இல்லையேல் இந்தப் பூவிர ல்கள் இத்தனை திடமாக வாளைப் பிடிக்க முடியுமா? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண் டான். கண்ணைச் சரேலென்று தூக்கிய இளையபல்லவன் அந்தப் பெண்ணின் முகத்தை இரண்டொரு விநாடிகளே ஆராய்ந்தானென் றாலும், அந்த இரண்டு விநாடிகளி லும் எத்தனையோ துன்பத்தை அனுபவிக்கவே செய்தான். அதி கப்படியான இன்பமும் துன்பந்தான் என்பதை அன்று உணர்ந்தான் அந்த பல்லவ வாலிபன்.

நீருண்ட மேகத்தைவிடக் கறு த்து அடர்த்தியாகத் தலைமீதிருந்த அவள் குழல் பின்னிவிடப்படாத தாலும், வாரி எடுத்து முடியப்பட்டி ருந்தாலும் ஒவ்வோரிடத்திலும் பிய்ந்து தொங்கி நுதலிலும் கன் னத்திலும் சில இழைகள் பதிந்து கிடந்ததுகூட அவள் முகத்துக்கு இணையற்ற அழகையே கொடுத் தது. விசாலமான அவள் லலாடப் பிரதேசம் மயிரிழைகளால் ஆங் காங்கு மறைக்கப்பட்டிருந்தாலும் இடையிடையே அவள் தங்கச் சருமம் பாளம் பாளமாகத் தோன்றி மேகத் திரையை கிழிக்க முயலும் சந்திரக் கிராணங்களைப் போலப் பளிச்சிட்டன. நுதலைக் கண்களி லிருந்து தடுத்து நின்ற வளைந்த கரிய புருவங்களுக்குக் கீழிருந்த இரு கண்களும் கரிய இமைகளுக் கிடையே கூர்வேல்களே எனப் பிரகாசித்துக்கொண்டிருந்ததையும், விகசிக்க அப்பொழுதுதான் முற்பட்ட புஷ்பமொட்டு போன்ற நாசி மிக எடுப்பாக அமைந்து அவள் முகத் துக்கு இணையற்ற கம்பீரத்தைக் கொடுத்ததையும், பக்கங்களில் வழ வழத்து இயற்கை மஞ்சளும், கோபத்தால் ஏற்பட்ட சிவப்புமாகக் கலந்து தங்க அரளியும் செவ்வ ரளியும் சேர்ந்தது போலப் பிரமை யளித்த அவள் அழகிய கன்னங் கள், இதழ்கள் பதிவதற்காகவே சிருஷ்டிக்கப்பட்ட மலர்ப் படுக்கைகள் போலிருந்ததையும் கவனித்த இளையபல்லவன், அவள் செவ் விய இதழ்களைக் கவனித்ததும் அவை உவமைக்கும் கற்பனை க்கும் அப்பாற்பட்டிருப்பதை உணர் ந்து கொண்டான். கோபத்தால் அவள் வாயிதழ்களைச் சற்றே கூட்டியிருந்ததால், மலர இஷ்டப் படாத புஷ்பம்போல் அவள் இதழ் களின் சேர்க்கை காணப்பட்டது. அவற்றில் காணப்பட்ட நீரோட்டம், 'அமுதம் என்பது இருந்தால் இது வாகத்தான் இருக்க வேண்டும்' என்று பொருள் கூறுவது போலி ருந்தது. அந்த உதடுகளிலேயே நீண்ட நேரம் இளையபல்லவ னின் கண்கள் நிலைத்தன. கண் கள் என்ன, அவன் இதயமும் அந் தக் கனியிதழ்களை விட்டு அகல இஷ்டப்படாதது போலவும், அந்த இதழ்களிடம் ஒழிவிட ஆசைப் படுவது போலவும் வேகமாக அழித் துக்கொண்டிருந்தது.

(தொடரும்...)

# 13ஆவது திருத்தத்திற்கு எவ்வித பாதிப்பும் வராது

# பழைய முறையில் மாகாண சபைத் தேர்தல்

## பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர் ஒன்றியம் உறுதி



**(கொழும்பு)**

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு எவ்வித பாதிப்பும் வராது. மாகாண சபைகளில் காணப்படுகின்ற குறைகள் திருத்தம் செய்யப்பட்டு அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என பொதுஜன பெரமுவின் மாகாண சபை உறுப்பினர் ஒன்றியத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித்தார்.**

மாகாண சபைகள் தேர்தல், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் கடந்தவாரம் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர், இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் தேவைகளையும், ஒரு சில மாகாண சபைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் கொண்டு மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய முடியாது.

இந்திய பிரதமருக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கடந்தவாரம் இணைய வழி கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஒரு சில மாகாண சபைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் வடக்கு மாகாண அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதி மீள மத்திய அரசாங்கத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில மாகாண சபைகள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது. இவ்விடயத்தில் தொடர்புடைய தரப்பினர் பொறுப்புக் கூற வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் மாகாண சபை முறைமை, அரசியமைப்பின் 13 ஆவது திருத்தம் ஆகியவை தொடர்பில் தேவையற்ற விமர்சனங்கள் எழுந்திருக்காது. கடந்த அரசாங்கம் பொறுப்பற்ற விதமாக செயற்பட்டமையின் காரணத்தினால் மக்கள் அந்த அரசாங்கத்தை புறக்கணித்து பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலமாக ஸ்தாபித்துள்ளார்கள்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும், மாகாண சபை முறைமைக்கும் எவ்விதப் பாதிப்பும் அரசாங்கத்தில் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மக்களின் இறைமை தனி நபரிடம்; நாம் அதனை எதிர்க்கிறோம்

## ஐ.தே.க. கூறுகிறது



(கொழும்பு)

மக்களின் இறையாண்மை தனிநபரிடம் வரையறுக்கப்படுகின்றமைக்கு நாங்கள் எதிரானவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

20ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைக்காக, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்திற்கு அவர் வருகை தந்திருந்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களை சந்தித்த அகிலவிராஜ் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐக்கிய தேசியக் கட்சி 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக 2 மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அந்தவகையில், நாங்கள் 20ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கின்றோம்.

மக்களின் இறையாண்மை தனிநபர் ஒருவரிடம் வரையறுக்கப்படுவதை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்.

குறிப்பாக, சுயாதீன ஆணைக்குழுக்கள், கணக்காய்வு திணைக்களம் மற்றும் ஜனாதிபதியின் அதிகாரம் உள்ளிட்ட முக்கிய பல விடயங்களில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் குறித்த 20ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பை தெரிவிப்பது மட்டுமன்றி அதற்காக நீதிமன்றம் செல்ல முடிவு செய்தோம்.

குறித்த 20ஆவது திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றம் முழுமையாக ஒப்புக் கொண்டால், அது ஒரு பிரச்சினையாக இருக்காது.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், அரசாங்கம் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை, விரைவாகக் கொண்டு வந்ததைப் பார்க்கும்போது, இந்த நாட்டின் சுதந்திரத்தையும் மக்களின் இறையாண்மையையும் மதிக்கும் எவருடனும் நாம் ஒருபோதும் உடன்பட முடியாதென தோன்றுகிறது.

ஜனாதிபதிக்கு மக்களின் இறையாண்மை வழங்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார். (ஜ-4)

# கழிவுகள் சேகரிப்பு வாரம் பிரகடனம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இலத்திரனியல் உபகரண கழிவுகளை சேகரிப்பதற்கான வாரமொன்றை மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன்படி எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை இலத்திரனியல் உபகரண கழிவுகளை சேகரிப்பதற்கான வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் தம்மிடம் உள்ள இலத்திரனியல் உபகரண கழிவுகளை அருகில் உள்ள தபால் அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இவ்வாறு சேகரிக்கப்படும் இலத்திரனியல் உபகரண கழிவுகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து, மீள்சுழற்சிக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் உபகரணக் கழிவுகளின் மூலம் ஏற்படும் இரசாயன மற்றும் கதிரியக்க பாதிப்புகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குதிரைகளுடன் கழுதைகளும் பாராளுமன்றம் வர வாய்ப்பு

## 20 குறித்து மெதகொட அபயதிஸ்ஸ தேரர்



(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், குதிரைகள் மாத்திரமல்ல, கழுதைகளும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனால், 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு பதிலாக உடனடியாக புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக் கப்பட வேண்டும்.

ஏதேனும் ஒருவகையில், புதிய அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வர முடியாது. 20 ஆவது அரசியலமைப்புத் திருத் தச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருந் தால், தற்போதுள்ள நிலைமையே இன் னும் 10 ஆண்டுகள் இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மெதகொட அபயதிஸ்ஸ தேரர், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக பிரதான பங்கை வகித்தவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 22 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் 20 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

அதே வேளை குமாரசாமிபுரம் காளிகோயிலடி பகுதியில் 2 லீற்றர் கசிப்புடன் இருவரும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)

# ராஜிதவுக்கு மீண்டும் அழைப்பாணை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவை எதிர்வரும் 5 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவு கொமாண்டர் சுமித் ரணசிங்க ஆணைக் குழுவில் மேற்கொண்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைவாக இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அரசியல் அழுத்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாக கொமாண்டர் சுமித் ரணசிங்க தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக ராஜித சேனாரட்ன உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள நிலையில், ராஜித சேனாரட்னவிற்கு நேற்று முன்தினம் ஆணைக்குழுவில் ஆஜராகாத காரணத்தால் அவருக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# எழுத்து-வாய்மொழிப் பரீட்சைகளுக்கு பதிலாக மாற்று முறையை பின்பற்ற தீர்மானம்

(கொழும்பு)

அரச கரும மொழிகளில் தேர்ச்சி பெறுவதற்காக எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சைகளுக்கு பதிலாக மாற்று முறையை பின்பற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக குறிப்பிட்ட மணித்தியால அளவிலான பாடத்திட்டத்தை பூர்த்தி செய்யும் வாய்ப்பை வழங்க உத் தேசிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அரச கரும மொழிகளில் தேர்ச்சி பெறுவதற்காக தற்போது காணப்படும் முறைமை மாற்றப்பட வேண்டும் என பலரும் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இந்தத் தீர்மானத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2131

### சுயா



முதியோர் இல்லத்திற்கு பணம் கொடு, பொருள் கொடு, உணவு கொடு, உடை கொடு,
உன் பெற்றோரை கொடுத்து விடாதே!!!
முதியோர் தின வாழ்த்துக்கள்...

### கஜன்




### சுரேஷ்

1000 புத்தகங்களை கொண்ட நூலகத்துக்குச் சமம் தாத்தா பாட்டி உள்ள வீடு....



### மீரா



ஒருவனை மனிதனாக ஆக்குபவை...
உதவிகளும், வசதிகளும் அல்ல அவனுக்கு
ஏற்படும் இடையூறுகளும்
துன்பங்களும் ஆகும்..

### சந்தியா



சோகமாய் இருக்கும் போது கூட சிரித்துக்
கொண்டே இரு உன் சிரிப்புக்காகவே
உன்னை ஒருவர் நேசிக்கக் கூடும்...!


### பூஜா

துன்பமின்றி பட்டாம்பூச்சிகளாய் சிறகடித்து
மகிழ்ச்சியாய் வாழும் சிறுவர்கள் அனைவருக்கும்
சிறுவர்கள் தின நல்வாழ்த்துக்கள்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 11 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்



(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 374 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி,இவர்களில் 7 பேர் ஓமான் நாட்டிலிருந்தும், லெபனான், கட்டார் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (2)

# ஆன்மீகம்



## பகைவனையும் நண்பனாக்கும் ரசவாதம்



பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே

பகைவனுக்கு அருள்வாய்!...

தின்னவரும் புலி தன்னையும் அன்பொடு

சிந்தையிற் போற்றிடுவாய்!

- என்று பாடுகிறார் மகாகவி பாரதியார். பகைவனையும் அன்போடு அரவணைத்து நண்பனாக ஆக்கிக் கொள்வதுதான் பாராட்டத்தக்க மேலான பண்பு. பகைவனை அழிக்காமல் அவன் உள்ளத்தில் உள்ள பகைமை உணர்வை அழித்துவிட்டால் அவன் நம் நேசத்திற்கு உரியவனாக பரிணாமம் பெற்று விடுவான்.

முருகப்பெருமானின் வரலாறான கந்தபுராணம் இதை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. முருகப்பெருமான் சேவற்கொடி தாங்கி மயில் வாகனத்தில் வலம் வந்து நமக்கெல்லாம் அருள்பாலிக்கிறார். ‘செவ்வேளே போற்றி! உன் சேவலும், மயிலும் போற்றி! என்று பக்தர்கள் வாழ்த்து இசைக்கிறார்கள். ஆணவத்தோடு தன்னை எதிர்த்த சூரபத்மனை அடியோடு அழித்துவிடவில்லை ஆறுமுகக்கடவுள்.

அவனின் அகந்தையைப் போக்கி நல்லுணர்வு ஊட்டினார். சூரபத்மனையே தன் அருட்பார்வையால் சேவலும், மயிலுமாக ஆக்கி தன்னிடமே வைத்துக் கொண்டார். இதைக் கச்சியப்பர் அற்புதமாகப் பாடுகிறார்:

‘தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்

தூயவராகி மேலைத் தொல்கதி அடைவார் என்கை

ஆயவும் வேண்டும் கொலோ அடுசமர் அந்நாட்செய்த

மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்தான்!

மாயாதேவியின் புதல்வனான சூரபத்மனுக்கே கருணை காட்டியவர் பக்தர்களாகிய நம்மை எல்லாம் பரிபாலிக்க மாட்டாரா? என்று பாடிப் பரவுகிறார் அருணகிரிநாதர். பகைவனுக்கு அருளிய பண்பாளராகிய பன்னிரு கண் வேலவனை நாம் வணங்கினால் போதாது. அவர் வழியில் நாமும் சென்று பகைமையை அழித்து நட்புணர்வை வளர்க்க வேண்டும். அவரை இந்த உலகம் உச்சிக்கு மேலாக வைத்து மெச்சும் தெரியுமா? யார் பகைவனையும் மன்னித்து, அவன் செய்த தீங்குகளையும் மறந்து அவனோடு நட்புறவு கொள்கின்றார்களோ அப்படிப்பட்டவரின் ஐந்து விரல்களுக்குள் இந்த அகிலமே அடங்கிவிடும் என்கிறார் திருவள்ளுவர்

‘பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன்

தகைமைக் கண் தங்கிற்று உலகு’.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தன் வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு தடைகளைச் சலிக்காமல் எதிர்கொண்டு ஏற்றம் பெற்றவர். அவருக்கு அரசியல் எதிரிகள் பலர் உண்டு. ஆனால், அந்த எதிரிகளின் நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். ஒருநாள் லிங்கனிடம் அவரின் நண்பர் ஒருவர் கேட்டார்.

‘நீங்கள் உங்கள் பகைவர்களிடமும் ஏன் பழக்கம் வைத்துள்ளீர்கள்?’ அதற்கு ஜனாதிபதி லிங்கன் தந்த பதில்: அவர்களை என் நண்பர்களாக மாற்ற முயல்கின்றேன். அம்முயற்சியில் நாம் வெற்றி அடைந்தால் என் எதிரிகள் ஒழிந்து விடுவார்கள் அல்லவா? விளக்கத்தைக் கேட்ட நண்பர் வியந்தார். மகிழ்ந்தார்.

சிலர் தன்னிடம் தவறாக நடந்து கொண்டவர்களைத் தாக்குவதற்கு தக்க சமயத்தை எதிர்நோக்கிக் காத்திருப்பார்கள். எப்படியாவது அவனுக்குப் பதிலடி தந்து விட வேண்டும் என்ற வன்மத்தை உள்ளத்தில் வளர்த்துக் கொண்டே இருப்பார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோத போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் உடதும்பர - நிசாருவ பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

39 வயதுடைய குறித்த சந்தேக நபரிடம் இருந்து 5000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 39 கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 8 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 343 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 343 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 46 ஆயிரத்து 673 பேர் இது வரையில் மொத்தமாகவிடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 74 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் 7 ஆயிரத்து 132 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## 339 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா தொற்றுக் காரணமாக மூன்று நாடுகளில் சிக்கியிருந்த மேலும் 339 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னிலிருந்து 287 இலங்கையர்கள் நேற்று மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

டுபாயிலிருந்து 47 இலங்கையர்களும் இந்தியாவின் மும்பையிலிருந்து ஐந்து இலங்கையர்களும் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன். தனிமைப்படுத்தலுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 |
| தக்காளி | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 80 |
| கோவா | 120 | 110 | 120 |
| கரட் | 100 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 250 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 80 |
| போஞ்சி | 300 | 320 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 180 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 280 | --- | --- |
| வெங்காயப்பூ | 240 | 260 | --- |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 30 |
| ஈரப்பலா | 50 | --- | --- |




# நம்பிக்கை மோசம்!

ஊரெல்லாம் கடன் வாங்கி அதைத் திருப்பித் தராமல் ஏமாற்றிக் கொண்டிருந்தான் ஒரு டம்பப் பேர்வழி. முல்லா விடம் ஒரு பெருந்தொகையை கடனாக வாங்கி அவரை ஏமா ற்ற அந்த டம்பன் தீர்மானித் தான்.

அந்த டம்பன் சாமர்த்திய மாகச் செயற்பட திட்டமிட்டான். முல்லா தன்னை நம்பிப் பெருந்தொகை கொடுக்கமாட் டார் என்று அவனுக்குத் தெரி யும். அதனால் தன்மீது அவ ருக்கு நம்பிக்கை ஏற்பட ஒரு நாடகம் நடத்த எண்ணினான்.

ஒருநாள் அவன் முல்லா விடம் சென்றான். முல்லா அவர்களே எனக்கு ஒரே ஒரு காசு கடனாகத் தர முடியுமா? என்று கேட்டான்.

நம்பிக்கை மோசம் செய் யாத யாருக்கும் நான் எவ் வளவு தொகை வேண்டுமா னாலும் கடன் கொடுக்கத் தய ங்கமாட்டேன். நீ ஒரு காசு தானே கேட்கிறாய்.

இதிலே நீ நம்பிக்கை மோசம் செய்யாமல் இருந்தால் பத்தாயிரம் காசுகள் கேட்டா லும் கொடுப்பேன் என்று கூறி டம்பனுக்கு ஒரு காசு கடனாகக் கொடுத்தான்.


டம்பன் நாலைந்து நாட்கள் கழித்து முல்லா கொடுத்த ஒரு காசு எடுத்துக் கொண்டு அவ ரிடம் வந்தான். முல்லா அவர் களே தாங்கள் கடனாகக் கொடு த்த அற்பப் பொருள்தான் என் றாலும் மிகுந்த நாணயத்து டன் பொறுப்புடன் திரும்பிக் கொடுத்து விடுவது என்று வந்திருக்கிறேன்.

பணவிடயத்திலே நான் மிகவும் நேர்மையானவன் என்பதை தாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியவாறு டம்பன் ஒரு காசை முல்லாவிடம் திரும்பிக் கொடு த்தான். முகத்திலே மலர்ச்சி யில்லாமல், ஏதோ உபாதைப் படுபவர் போல ஒரு காசை வாங்கிக் கொண்டார் முல்லா.

டம்பன் அந்த இடத்தை விட்டு அகலாமல் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான். என்ன சமாச்சாரம்? என்று முல்லா கேட்டார். ஐயாயிரம் பொற்காசுகள் கடனாகத் தர வேண்டும்.

நாணயமாக ஒரு காசை திருப்பிக் கொடுத்தது போல ஐயாயிரம் பொற்காசுகளையும் திரும்பித் தந்து விடுவேன் என்றான் டம்பன். உனக்கு இனி நான் ஒரு காசுகூட கட னாகக் கொடுக்க முடியாது என்று முல்லா கோபமாகச் சொன் னார்.

முதலில் நான் வாங்கிய ஒரு காசைத்தான் திரும்பத் தந்துவிட்டேனே என்று ஒன் றும் விளங்காமல் கேட்டான் டம்பன். நீ ஒரு காசு கடன் வாங்கிய விடயத்தில் நம்பிக் கைத் துரோகம் செய்து விட் டாய் என்றார் முல்லா.



டம்பன் அதிர்ச்சியும் குழப்ப மும் அடைந்தான். முல்லா அவர்களே நான் வாங்கிய தொகையைத் தந்திருக்கும் போது நம்பிக்கை துரோகம் செய்ததாக எவ்வாறு கூறுகிறீர் கள்? என்று கேட்டான்.

நம்பிக்கை மோசம்தான் செய்து விட்டாய். நான் கொடு த்த ஒரு காசை நீ திரும்பிக் கொடுக்காமல் ஏமாற்றி விடு வாய் என்று நம்பினேன். நீயோ திருப்பிக் கொடுத்து விட்டாய்.

அதாவது நான் என்ன நம் பினேனோ அதற்கு மாறாக நடந்து விட்டாய். ஆகவே இது வும் நம்பிக்கை மோசம் தான். அதனால் ஒரு காசு கூட உனக் குக் கடன் தரமாட்டேன் என்று கூறியவாறே முல்லா வீட்டுக் குள் எழுந்து சென்று விட்டார்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்

84

அதேபோலத் தண் டனையாகக் கோயிலு க்கு இவ்வளவு தானம் கொடுக்கப்படவேண் டும் என்று தீர்ப்பு எழுதப்பட்டது.

**தெருக்கள்**

ஒருங்கினால் உருப் பெற்ற தேசத்தின் அடையாளம், தெருக் கள், ராஜராஜன் ஆட் சிக்காலத்தில் இருந்த ஒவ்வொரு தெருவும் சோழர் வரலாற்றைச் சொல்பவையாக இருந் தன. ஒவ்வொரு தெரு விலும் ஒரு கதை இரு ந்தது.

ராஜராஜனின் அரண் மனை இருந்த பகு திகள் தஞ்சாவூர் உள் ளாலை என்று குறிப் பிடப்பட்டன. நகரம் என்பதற்கான இன் னொரு குறிப்பு அது. அதற்கு வெளியே உள்ள புறநகர்ப் பகு திகள் புறம்படி என்ற ழைக்கப்பட்டன.

தெருக்கள், பெருந் தெருக்கள், வேளம், படை வீடு, தளிச்சேரி, மடவி ளாகம், அங்காடி, பேரங்காடி, சுரபி என்று நகர் நிர்வாகத்தில் ஏரா ளமான பிரிவுகள் இரு ந்தன.



தஞ்சைப் பெரியகோயில் ஆடல் மகளிரின் ஓவியம்

உள்ளாலையில் ராஜ ராஜனின் அரண்மனை யும் பெரிய கோயிலும் அரசு நிர்வாகத்தின் அனைத்து அலுவலகங் களும் இருந்தன.

அரண்மனைக்கு அருகே காவலர் விடுதி கள் இருந்தன. தேர்ப் பாகர், யானைப் பாகர் குதிரைப் பாகர், படைத் தலைவர் ஆகியோர் வசிப் பதற்கேற்ற அறை கள் உருவாக்கப்பட்டன.

பெரிய கோயிலுக்கு வெளியே வடமேற்குப் பகுதியில் தளிச்சேரி கள் என்கின்ற ஒரு பகுதி இருந்திருக்கின் றது. இங்குள்ள ஒவ் வொரு தெரிவிலும் 90 வீடுகள் இருந்திருக் கின்றன.

இந்த வீடுகளில் ஆடல் மகளிர் வசித் தார்கள். இவர்கள் வீடுகளுக்கு கதவிலக்க எண்கள் வழங்கப் பட்டிருந்தன.

அந்தணர் வாழும் தெருக்களும் பெரிய வணிகர்கள் வசித்த தெருக்களும் அரண் மனைக்கு அருகிலேயே இருந்தன.

இவர்கள் மட்டுமல் லாமல் வேளாளர், மருத் துவர், ஜோதிடர், இசை வாணர், இசைக் கலைஞர்கள் ஆகியோர் தனித் தெருக்களில் வசித்துள்ளனர்.

அதேபோல், உள்ளா லையில் சாலியத் தெரு வும் இருந்திருக்கின் றது.

(தொடரும்)

உயர்ந்த குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து அதை நோக்கி முழு ஈடுபாட்டுடன் உழைக்கத் தொடங்குங்கள். – சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதைந்த தேர் வடத்தை தொய்யவிடாமல் இழுக்க வேண்டும்

தமிழர்களின் வாழ்வில் தேர் என்பது மிகுந்த முதன்மை கொண்டது.

ஆலயத் திருவிழாக்களில் தேரில் இறைவனை ஆரோகணிக்க வைத்து, ஊர் கூடி வடம் இழுத்து மகிழ்வடைகின்ற தேர்த் திருவிழா திருவிழாக்களுக்கெல்லாம் தலையானது.

தவிர, நம் தமிழ் மன்னர்கள் தேரில் பவனி வருவதை மன்னர்க்குரிய மாண்பாகக் கருதினர்.

மனுநீதிச் சோழ மன்னனின் நீதி உலகெங்கும் பரவுவதற்கு தேரின் வகிபங்கு காத்திரமானது.

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னனின் ஈகையோடும் தேர் தொடர்புபட்டுள்ளது.

எங்கள் மண்ணில் நடந்த யுத்த அனர்த்தங்களில் செல்வச்சந்நிதித் தேர் எரியூட்டப்பட்ட நிகழ்வும் அதன் தாக்கமும் வரலாற்றோடு பதிவானவை.

இங்கு ஆலயங்களில் தேர் முதன்மை பெறுவதற்குக் காரணம், ஊர் கூடி வடம் பிடித்தால் மட்டுமே தேர் அசையும்.

ஆக, மிகப் பெரும் தேரை இழுக்க வேண்டுமாயின் அதற்கு ஊர் கூட வேண்டும். ஊர் கூடுதல் என்பது ஒற்றுமை இருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

ஆக, மிகப்பெரும் தேரை இழுப்பதற்கு ஒற்றுமை அவசியம் என்பதாலும் தேர்த் திருவிழா சிறப்பும் முதன்மையும் பெறலாயிற்று.

இங்கு வடம் பிடித்து தேர் இழுத்தல் என்பது சாதாரணமான விடயமன்று.

தேரைத் திருப்புவதும் நேர்ப்படுத்துவதும் ஆசாரியரின் கையில் இருந்தாலும் தேர் இழுபட்டால் மட்டுமே சறுகுகட்டை வேலை செய்யும்.

இங்கு சிலவேளைகளில் தேர் புதைவதுமுண்டு. தேர் புதைந்தால் வடம் பிடிப்பவர்கள் உரமாகவும் தொடர்ச்சியாகவும் தேரை இழுக்க வேண்டும்.

இவ்விடத்தில் ஆசாரியர் இரண்டு கைகளையும் உயர்த்தி அசைத்து தேரை இழுக்குமாறு அடியவர்களுக்குக் கூறுவர்.

புதைந்த தேரை மீட்டெடுப்பதற்கான ஒரே வழி தேரை விடாமல் இழுப்பதாகும்

இங்குதான் புதைந்த தேரோடு எங்கள் இனப்பிரச்சினையும் தொடர்புபடுகிறது.

எங்கள் உரிமைத் தேர் புதைந்து கிடக்கிறது. அதனை மீட்டெடுக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகத் தேரை இழுக்க வேண்டும்.

இதற்கு மேலாக, எங்களிடம் இருக்கக் கூடிய முழுப் பலத்தையும் பிரயோகித்து தொடர்ச்சியாகத் தேரை இழுத்தால் மட்டுமே புதைபட்ட எங்கள் உரிமைத் தேர் அசைந்து இருப்புக்கு வந்து சேரும்.

# இலங்கை சிங்கள பெரும்பான்மை மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

இலங்கை சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு இலங்கை பல இனங்களைக்கொண்ட நாடென்பதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்துள்ள அவர்,

"உண்மையில் தமிழர்களை பொறுத்தவரை இலங்கையின் அரசியலமைப்புக்கள் எதுவும் தமிழர்களுக்கு ஒருபோதும் நேர்மையாக இருந்திருக்கவில்லை.

இந்த நாட்டில் நிறைவேறிய, பெரும்பான்மைத்துவ வாதத்தை மையப்படுத்திய மூன்று ஒற்றையாட்சி அரசியலமைப்புகளுமே அடிப்படையில் தமிழர்களுக்கு எதிரான ஒரு ஜனநாயக மீறலாகவேதான் அமைந்திருந்தன.

இந்த அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 17 ஆம் 19ஆம் திருத்தச் சட்டங்கள் மூலம் ஜனநாயகம் பாதுகாக்கப் படும் என கூறப்பட்ட போதிலும் உண்மையான நடைமுறையில் தமிழர்களுக்கு எதுவித நீதியும் ஜனநாயகப் பாதுகாப்பும் அதன்மூலம் கிடைத்திருக்கவில்லை என்பது தான் யதார்த்தம்.

கடந்த 72 வருடமாக எண்ணிக்கையில் சிறிய இனங்களின் ஜனநாயக உரிமைகளை தொடர்ச்சியாக பறித்து பழக்கப்பட்டு வந்த சிங்கள அரசுகள், தற்போது இந்த 20ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் எதுவித கூச்சமும் இன்றி தனது சொந்த மக்களின் ஜனநாயக உரிமைகளிலேயே கைவைக்க தொடங்கியிருக்கிறது.

தற்போது உங்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு ஜனநாயக உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றபோது அதற்கு எதிராக நாமும் உங்களுடன் இணைந்து குரல் கொடுக்க முன்வந்துள்ளோம்.

மேலும் 20ஆம் திருத்தத்துக்கு எதிரான சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துவதுடன், அதற்கான எமது பூரண ஆதரவையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### சாவகச்சேரி மீசாலைப் பகுதியில்

## இலத்திரனியல் பொருட்கள் விற்பனை செய்யும் கடையில் தீ விபத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மீசாலை மேற்குப் பகுதியில் உள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற தீ விபத்தில் கடையில் இருந்த பெறுமதியான பொருட்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்த இளைஞன் காலையில் கடையினைத் திறந்து வியாபாரம் மேற்கொண்ட பின்னர் 10 மணியளவில் கடையின் கண்ணாடிக் கதவினை மூடி விட்டு வெளியில் சென்றிருந்த நிலையிலேயே இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதன்போது கடையில் இருந்த கணினி உள்ளிட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இருப்பினும் அருகில் காணப்பட்ட வாகன திருத்தக உரிமையாளர் தண்ணீர் ஊற்றி தீயினை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## ரமண மகரிஷியின் சிந்தனையிலிருந்து

### வலது பக்கத்தில் ஒரு இதயம்

❖ பிரபஞ்சம் முழுவதும் உடலில் இருக்கிறது. உடல் முழுவதும் இதயத்தில் அடங்குகிறது. எனவே, பிரபஞ்சமே இதயத்தில் அடக்கம். உலகத்திற்குச் சூரியனைப் போன்று உடலுக்கு இதயம். சூரியன் சந்திரனுக்கு ஒளி தருவதுபோல இதயம் மனதிற்கு ஒளி தருகிறது.

❖ சூரிய அஸ்தமனத்தின்போது சந்திர ஒளியை மட்டும் காண்பதைப் போன்று, இதயத்திலிருந்து விலகி நிற்கும்போது மனத்தை மட்டுமே காண முடிகிறது.

❖ இதயத்தில் வசிப்பவர் மனம், பகலில் சந்திர ஒளி போன்று, இதய உணர்வில் கலந்து விளங்குகிறது. "பிரக்ஞானம்" என்ற சொல்லுக்கு வெளிப்படையான பொருள் "மனம்" என்றாலும், அது இதயத்தையே குறிக்கிறது என அறிஞர் உணர்வர். பரம்பொருள் இதயமே.

❖ அறிபவருக்கும் அறி பொருளுக்கும் இடையே உள்ள வேறுபாடு மனத்தளவிலே தான் உண்டு. மயக்கம், அதிகமான மகிழ்ச்சி அல்லது துக்கம், பயம் போன்றவற்றால் எண்ணங்கள் வலுக்கட்டாயமாக நிறுத்தப் பெறும்போது மனம் தனது மூலமாகிய இதயத்திற்கு செல்கிறது. அத்தகைய கலப்பை நாம் உணர்வதில்லை. இருப்பினும் உணர்வோடு இதயத்தில் நுழையும்போது அது "சமாதி" என்று அழைக்கப்பெறும்.

❖ இதயக் குகையின் நடுவே பிரம்மம் மட்டுமே ஒளிர்கிறது. "நான்-நான்" என்ற நேரிடையான ஆன்ம அனுபவமே இது. ஆத்ம விசாரத்தின் மூலமோ அல்லது கலப்பினாலோ, அல்லது மூச்சடக்கத்தினாலோ இதயத்தில் நுழைந்து அதாகவே வேரூன்றி இரு.

❖ ஸ்தூல இதயம் இடது பக்கத்தில் இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், நான் பேசுகின்ற இதயம் வலப்பக்கத்தில் இருக்கிறது. இது எனது அனுபவம். இதற்கு வேறு சான்று தேவையில்லை.

## சத்திய தரிசனம்

### யோசித்துப் பேசுங்கள்



❖ ஆன்மீக இயல்பு கொண்டவனாக மனிதன் இருக்கவேண்டும். அவன் செல்லும் இடத்தில் எல்லாம் தெய்வீக மணம் கமழும் விதத்தில் செயற்பட வேண்டும்.

❖ உயிர்களின் நலனுக்காக கடவுள் உலகினை படைத்தார். ஆனால், மனிதனோ தன் முனைப்பு காரணமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

❖ செயலைப் பொறுத்து தான் விளைவு உண்டாகிறது. ஆனால், மனிதன் நல்லதை தீயதாகவும், தீமையை நல்லதாகவும் கற்பனை செய்து கொள்கிறான்.

❖ அடுத்தவர்க்கு தீங்கு நினைப்பது கூடாது. பொன், பொருள், கவுரவம், பட்டம், பதவி என்று சுய நலத்துடன் அலைவது கூடாது.

❖ சேருமிடம் வந்து விட்டால் பயணத்தை முடித்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கிவிடுவோம். அதுபோல், வாழ்வின் எல்லையான ஆயுள் முடிந்து விட்டால் உடல்விட்டு உயிர் நீங்கி விடுகிறது.

❖ சிந்தனை அனைத்திற்கும் சொல்வடிவம் கொடுத்து விடாதீர்கள். சொற்களைத் தேர்ந்தெடுத்து யோசித்துப் பேசுங்கள்.

# மரண அறிவித்தல்



## பார்வதிதேவி சதாசிவம்

**தோற்றம் : 24.06.1942 மறைவு : 29.09.2020**

யாழ். வடமராட்சி, புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதிதேவி சதாசிவம் நேற்று முன்தினம் (29.09.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கதிர்காமு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கதிர்காமு சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முரளிதரன் (ஆனந்தன்) மற்றும் சத்தியா, சத்தியராணி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிருந்தா, காலஞ்சென்ற சத்தியா ஆகியோரின் அன்பு மாமியாரும் கமலாம்பிகை, சீதாதேவி, சுப்பிரமணியம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இலக்குமிதேவி, உருக்குமணிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுவீகா (ஆனந்தி), துஷேத், நிஷேத், கிஷேத், மௌசிகா, வர்ஷகா, றித்திக்கா, ஹிருத்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சத்தியா - மகள் - 00447 741 414328
சத்தியசீலன் - மகன் - 00447 861 238514
கமலாம்பிகை - சகோதரி - 00942 122 64758

(C-448)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## விசாலாட்சி பொன்னுத்துரை

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் செல்வபுரம் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட விசாலாட்சி பொன்னுத்துரை நேற்று (30.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசமலர் மற்றும் சுப்பிரமணியம், யோகநாதன், சுசிலாதேவி, இரவீந்திரராசா, தயாகரன் (பிரான்ஸ்), விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதமலர், தியாகேஸ்வரி, சந்திரலிங்கம், வாசுகி, சுதாகினி, சவுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் இலட்சுமி, தர்மலிங்கம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகிர்தன் (முன்னாள் மாகாணசபை உறுப்பினர்), சுவர்ணன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுகர்ணன் (அதிபர் - முழங்காவில் ஆரம்பப் பாடசாலை ), சுகேசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுதந்திரன் (கொமர்ஷல் கிறெடிட் - நெல்லியடி), துசிகரன் (வெஸ்ரன் டெக்கிறேசன்), சுகந்தன், சுகிந்தா, வினோசன் (கொமர்ஷல் கிறெடிட் - சுன்னாகம்), சுலக்சனா, ஜீவாயினி, நிதுர்சா (பிரான்ஸ்), நிரூசன் (விற்பனைப் பிரதிநிதி), சனுஜன் (பொறியியல் பீடம் - பேராதனை), சனுஜா (மாணவி - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), பிரதீபன், பிரகாஸ் (சவூதி), துர்க்கா ஆகியோரின் பேர்த்தியும் சன்விகா, ஆயிசன், அஸ்விகன், கரிஷன், அத்திக்கா, டயனிகா, அபிவர்ஜன், சதுஸ்ரிகன், சண்சிகா, சஸ்வின், டியா, லக்ஷி, அனுஸ்டன், பிறிண்ஸ்ரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 11.00 மணியளவில் புலோப்பளை அறத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வபுரம்,
பளை.

077 248 7653

(C-454)

தகவல்:
சந்தரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் )

## நவம்பர் 17...

ஊடக சந்திப்பில் அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

## 2ஆம் தவணை...

அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் 2ஆம் தவணை விடுமுறைகள் ஆரம்பிக்கின்றன.

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 9ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 13ஐ இலங்கை...

கூறியுள்ளார்.

"15 மில்லியன் டொலர் நிதியையும் கொடுத்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் இந்தியப் பிரதமர் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் இந்த மென்மையான காலனித்துவத்திற்கு அடிபணியாமல் போராடி உயிர்த் தியாகம் செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்திய அணியில் இருந்து அரச உணவை உண்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. புதிய அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் ஒருபோதும் இருக்காது" என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

## துண்டாடப்பட்ட...

முழுமையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை ஒருவருக்கு மேற்கொண்ட விதம் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றையதினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே த.சத்தியமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொதுமக்கள் கைகள், கால் துண்டாகுதல் தொடர்பாக விழிப்புணர்வு அடைய வேண்டும்.

அளவுக்கு மேலாக வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றாலும் இவ்வாறான சிகிச்சைகள் வழங்க முடியாது போகக்கூடும்.

இது பல சிக்கலான சிகிச்சை முறை என்பதை பொதுமக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும். யாழ்.போதனா வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் இளஞ்செழியன் பல்லவன் தலைமையிலான குழுவினரே இதனை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,33)

## ஹெரோயினுடன்...

ஸார் தெரிவித்தனர்.

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை நுகர்ந்த நிலையில் கைது செய்யப்பட்ட இருவரும் நல்லூர் மற்றும் பாசையூர் பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடம் இருந்து தலா 30 மில்லி கிராம் மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது. (ம-3)

## பாதுகாப்பற்ற...

சம் அணிவது உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்றுவது முக்கியம் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## நீதிக்காகப்...

அமைப்பின் சார்பாக உரையாற்றிய அர்த்னா பிரபாகரன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

உண்மை நீதியின் சிறப்பு அறிக்கையாளர் அண்மையில் வழங்கிய அறிக்கையில் தமிழர்களுக்கு நடந்த மனித உரிமை மீறல்களை பட்டியலிட்டதை தாம் வரவேற்பதாகவும் அர்த்னா பிரபாகரன் குறிப்பிட்டார்.

11 ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் இராணுவ ஆக்கிரமிப்பால் புதிய இலங்கை அரசும் தொடர்ந்து தமிழர்களின் வாழ்வை அழிக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மேலும் இறுதி யுத்தத்தில் குற்றங்களுக்கு பொறுப்பான இராணுவ குற்றவாளிகளை உயர் பதவிக்கு நியமித்ததை நினைவுபடுத்திய அவர், தொண்டு நிறுவனங்களை கண்காணிக்கவும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் செயற்படவும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தவும் பாதுகாப்பு அமைச்சை நியமிப்பது மிகவும் கவலையைத் தருகிறது எனவும் கூறினார். (ம-3)

## மாவை தலைமை...

இதன் காரணமாக தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள 10 கட்சிகள் இணைந்து செயற்படுவது என தீர்மானித்தன.

இவ்வாறு இணைந்த கட்சிகள் இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக போராடுவது என தீர்மானித்தது. அண்மையில் கதவடைப்பு போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் தமிழ் தேசிய பரப்பில் நாம் அடுத்த கட்டமாக எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் பத்துக் கட்சிகளும் நேற்று கலந்துரையாடின. மேற்படி கலந்துரையாடலுக்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நீதி...

எது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் உள்ளிட்ட 39 மனுக்கள் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனுக்கள் மீதான நீதிமன்ற நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்த நிலையில் 39 மனுக்களையும் சீராய்வு செய்யும் நடவடிக்கைகள் கடந்த இரு நாட்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 2ஆம் திகதி முற்பகல் 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தங்கச்சிப்பிள்ளை துரைசிங்கம்

மலர்வு: 20.08.1944 உதிர்வு: 13.10.2019

பலாலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தங்கச்சிப்பிள்ளை துரைசிங்கம் அவர்களின் ஒரு வருட நினைவு தினம் அவரது மகனது இல்லத்தில் (இல.1111, திருநகர், கிளிநொச்சி) அனுஷ்டிக்கப்படுவதால் அவரது உறவினர், நண்பர்கள் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:- துரைசிங்கம் மகாராஜா (Janu Travles உரிமையாளர்) 077 664 6466

(C-449)


## கொல்கத்தா வெற்றி





வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


### சேவன

| | |
|---|---|
| திகதி | 30/09/2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 300 |
| ஆங்கில எழுத்து | T |
| வெல்லப்பட்ட இலக்கங்கள் | 09 17 25 52 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 30/09/2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0628 |
| வெற்றி எழுத்து | Z |
| சுப்பர் இலக்க | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 18 44 55 68 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2020/09/30 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4261 |
| ஆங்கில எழுத்து | U |
| வெல்லப்பட்ட இலக்கங்கள் | 1 7 7 4 0 0 |

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 30-09-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1059 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 2 7 9 6 |

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 30/09/2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2556 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 6 4 5 7 1 |

தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1057
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.09.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,382,610/-
வெற்றி இலக்கங்கள்: 44 51 61 68
ஆங்கில எழுத்து: E
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்: 9938
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம்: 650
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.30
சீட்டிழுப்பு இல. : 3387
வர்ணம் : ஊதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,449,621.40
வெற்றி இலக்கங்கள்: 04 14 22 62
ஆங்கில எழுத்து: B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்: 9578
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1231 — நிறம் இள மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 30/09/2020 — தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: E 29 50 68 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 21,548,040/=
SUPER 500 விசேட இலக்கம்: 3 9 7 3
SUPER CASH விசேட இலக்கம்: 7 7 6 1 6
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி 0112 333 546-47
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1694
சீட்டிழுப்பு திகதி 30/09/2020
வெற்றி இலக்கங்கள்: 11 47 55 60
ஆங்கில எழுத்து: O
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54,390,524
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 30.09.2020 | 2938 | பச்சை |

வெற்றி இலக்கங்கள்: 03 19 22 46
விருச்சிகம்
ரூ.500 பரிசுக்குரிய 1908
ரூ.100 பரிசுக்குரிய 113
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,788,820
www.dlb.lk
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்திக்கு
அண்மையில் 5 பரப்பும்
கோப்பாய் பூதர்மடச் சந்தியில்
இருந்து 400 மீ. தூரத்தில்7 பரப்புக்
காணியும் விற்பனைக்கு உண்டு. (4340)

**தொடர்பு - 077 601 1135**

## தேவை

யாழ். நகரிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு
வேலையாட்கள் தேவை.

- மேசன் வேலையாட்கள்
- அலுமினிய பிற்றிங் வேலையாட்கள்

(நாளாந்த சம்பளம் வழங்கப்படும்.) (4341)

**தொடர்பு : 077 105 6694**

## வேலைக்கு ஆள் தேவை

**அனுபவமுள்ள பெண் அலுவலக உதவியாளர்**

- கல்வித் தகைமை (O/L, A/L)
- கணனி அறிவுள்ளவர் விரும்பத்தக்கது
- வயது (25-40)
- சாரதி அனுமதிப்பத்திரம் விரும்பத்தக்கது.
- ஆங்கிலம், சிங்களம் விரும்பத்தக்கது.



இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 077 592 5088, 021 222 8680
Email : dayanaplastico@gmail.com (4338)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு

இராச வீதி, முதலாம் ஒழுங்கையில்
( கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு
அருகாமையில் ) 3 பரப்புக் காணி
விற்பனைக்கு.
( 1 1/2ப் பரப்புக்களாகவும் பிரித்துக்
கொடுக்கப்படும்.) (4342)

**077 468 3354, 076 221 2037**

## வாடகைக்கு உண்டு

பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட
பரமேஸ்வராச் சந்தியிலுள்ள கட்டடத்தில்
வியாபார நிலையத்திற்கு ஏற்ற இடம்
தளபாடமிடப்பட்ட (T.V அலுமாரி)
இணைந்த குளியலறை கொண்ட
அறைகள் (சமையல் வசதியுடன்) (4341)

**தொடர்பு : 077 953 0496**

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள
Pleasure மோட்டார் சைக்கிள்,
சுத்த சணல் பால் ஆடு,
பசுக் கன்று என்பன
விற்பனைக்கு.

தொடர்பு: (4339)

**076 411 0156**

## காணி விற்பனைக்கு

நெடுங்குளம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணத்தில்
10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்புக்களாக பிரித்தும் கொடுக்கப்படும்.)
பரப்பு ஆறு இலட்சம்
தரகர் தேவையில்லை (4100)

**077 468 3354 / 076 221 2037**

## வகுப்புக்கள்

German, Swiss
செல்வோருக்கான Personal
வகுப்புக்கள். A1 பரீட்சைக்குரிய
இலகுவான வழிகாட்டலுக்கு. (C-391)

தொடர்பு
**076 401 8564**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது
(இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிக்ள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-112)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம், வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**0768226243**
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-1025/=Kg (C-308)
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

DHL
**0768226240**

## இப்போது யாழ்.நகரிலும்

இரண்டு மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து
விட்டனவா? உடன் உங்களது
வீடுகளுக்கே வந்து திருத்தி
தருகிறோம். அழையுங்கள்
**077 9086737**
GUNA BEST PC COMPUTER REPAIR
**CCTV Camera**
379, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம் (4338)

## அமெரிக்க லொத்தர் விசா

**2020**
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க
லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.



இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை
எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-308)
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் **V2 TRAVELS**
**0768226244**

## கனடாவில் வேலைவாய்ப்பு / கல்வி கருத்தரங்கு

மிகவும் குறைந்த செலவில் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகுவதற்கான வாய்ப்புக்கள்

Home support worker / child care provider
வருடத்திற்கு 5000 வீசா வாய்ப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் கற்று
கனடாவில் வேலை செய்யலாம்

அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
- வயதெல்லை :- 19 முதல் 50 வரை

அனுமதி இலவசம்

ஞாயிறு காலை 11 மணி
**04-10-2020**

CANADA MIGRATION PILOT CIMS (C-308)

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA.B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants

CAPIC ACCP

**CIMS COLLEGE**
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777 / 0777068777

# மரண அறிவித்தல்



## திருமதி திவ்வியபவானி சிவமோகன்

பிறப்பு 09.06.1957 இறப்பு 30.09.2020

மண்டைதீவு மற்றும் புங்குடு தீவைப் பூர்விக இடமாகவும் இல. 28, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திவ்வியபவானி சிவமோகன் நேற்று (30.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகம் (மேனாள் பிரதம எழுது வினைஞர்) மற்றும் இரத்தினம் (ஓய்வு நிலை ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கலாநிதி கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் பிள்ளை (மேனாள் துணை அதிபர் - யாழ்.இந்துக் கல்லூரி), ஞானபூரணி (மேனாள் ஆசிரியை - கந்தர்மடம் சைவப்பிரகாச மகா வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சிவமோகனின் அன்பு மனைவியும் சிவநயனி (உதவிப் பதிவாளர் நாயகம் திணைக்களம் - வடமாகாணம்), சிவசங்கரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சர்வேஸ்வரா (விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), கௌரி சங்கர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் குகப்பிரணவி, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வசந்தகுமார் (ஐக்கிய இராச்சியம்), நளினி (அவுஸ்திரேலியா), வசந்தி (அவுஸ்திரேலியா), சாந்தி (அவுஸ்திரேலியா), துஷ்யந்தி (மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் மூத்த சகோதரியும் ஞானசம்பந்தனின் (சிவாஜி) பாசமிகு அண்ணியும் கமலா (ஐக்கிய இராச்சியம்), விமலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), கணேசன் (அவுஸ்திரேலியா), உதயன் (அவுஸ்திரேலியா), Dr.குமரவேள் (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜன், ஸ்ரீலக்ஷ்மி, கார்த்திக், சாயிபாரதி, விஜய், நிலானி, நிவேதா, எழினி, வேளினி, வேணிலா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் றெபேக்காவின் மாமியும் அஸ்வினின் அத்தையும் மாயாவின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4331)

இல. 28. குமாரசாமி வீதி.
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 844 9739
021 222 7302
தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 – 05 – 1934



இறப்பு 29 – 09 – 2020

## நீலாம்பிகை தியாகராஜா

காரைநகர், களபூமி, சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கொக்குவில்லை வசிப்பிடமாகவும் கொண்ட நீலாம்பிகை தியாகராஜா நேற்று முன்தினம் (29.09.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தியாகராசாவினுடைய அன்பு மனைவியும் நவமணிதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கமலாதேவி, சற்குணராஜா, தேவயோகேஸ்வரி (சித்திரா), சத்தியதேவி (சந்திரா), அம்பிகாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராஜா, உலகநாதன், காலஞ்சென்ற மல்லிகாதேவி, குகநேசன், சிவபாலன், கோணேசலிங்கம், வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகந்தன், சுகன்யா, கௌசிகன், சிந்துஜா, பவித்திரன், கஜந்துகன், கஜந்துகா, நீரா, கௌதன், கபிஷன், டினோஷன், ஜனகன், பிரபு, தாட்சாயினி, மதுஷன், மதுஷா, மைக்கேல் ஆகியோரின் அன்புப்- பேர்த்தியும் சாய்அபினேஷ், ஷரிஷ், நதாஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4331)

இல. 27. கருவேலடி வீதி.
கொக்குவில் கிழக்கு. யாழ்ப்பாணம்.
077 829 0351
தகவல்:- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.